

# திறவுகோல்

2050 மாசி
மாத இதழ்

யானை அப்பா

---

காசு என்னும் காகிதம்

---

அம்மாயி

---

துபாய் குறுக்கு சந்து அல்ல!

செண்பக வனம்


வெளியீடு

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# யானை அப்பா

இந்த கதையில் ஒரு வயதான யானை, அது வாழ்ந்த காட்டிலிருந்து நாம் வாழும் நகரம் ஒன்றிலுள்ள மிருகக் காட்சி சாலைக்கு கொண்டு வரப்பட்டது எப்படி என்பதை கூறுவதாகும்.

காட்டில் இந்த வயதான யானைக்கு 'யானை' என்றே பெயர். இந்த வார்த்தையைக் கேட்டால் கிராமத்தவருக்கு இதயம் நடுங்கும்.

அந்த யானை காட்டில் இளமையாக இருந்தபோது, இப்போது இருப்பதைப்போல அடங்கிபோகும் யானையல்ல. குழந்தைகள் அதன்மேல் விளையாட்டாக சவாரி செய்ய முடியாது. மேலும் 'யானை' ஒரு முரட்டான மிருகம். எல்லோரும் ஓரடி தள்ளிதான் நிற்பார்கள். அதைக் காட்டில் பார்த்தாலோ அல்லது அது கிளைகளை முறிக்கும் சத்தம் கேட்டாலோ கிராமத்தவர்கள் தங்களால் எவ்வளவு வேகமாக ஓடமுடியுமோ அவ்வளவு வேகத்தில் ஓடிவிடுவார்கள். ஏனென்றால் 'யானை'யைப்போன்ற மற்ற யானைகள் காட்டில் பார்க்கும் மனிதர்களைப் பிடித்து மிதித்து கொன்றுவிடும் அல்லது தன் தும்பிக்கையால் தரையில் ஓங்கியடித்துவிடும் என்று அவர்களுக்கு தெரிந்திருந்தது.

யானை மிகப்பெரிய மிருகம். அதனால் வேகமாக ஓடமுடியாது என்று நினைக்க வேண்டாம். அப்படி ஓட வேண்டிய நேரத்தில் ஒரு யானை மனிதைப்போல வேகமாக ஓடும். மிக நீண்ட தூரத்திற்குகூட ஓடும். காட்டில் ஒரு ஆளை சுலபமாக பிடித்துவிடும். மனிதனால் புதர்களுக்குள்ளே புகுந்து ஓடமுடியாது. முள் போன்றவை மனிதனை சுற்றிக்கொண்டு போக வைக்காது . ஆனால் யாரையாவது யானை துரத்தும்போது அது எந்த புதருக்குள்ளும் நுழைந்து மனிதன் ஓடுவதைவிட வேகமாக ஓடி பிடித்துவிடும்.

நமது 'யானை' தன் மனைவியுடனும் தன் இரண்டு பிள்ளைகளுடனும் காட்டின் அழகான பகுதியில் பல ஆண்டுகளாக வாழ்ந்தது. அது வயதானதாகும் வரை அங்கே வாழ்ந்தது. ஒரு அழகான நதி அந்த காட்டில் ஓடிக் கொண்டிருந்தது. மழை காலத்தில் மிருகங்கள் தண்ணீர் குடிக்கவும், குளிக்கவும் அந்த நதி உதவியது. மலைகளுக்வகு இடையில் உள்ள பள்ளத்தாக்குகளில் நிறைய மூங்கில் மரக்கூட்டம் வளர்ந்திருந்தது. யானையும் அதன் குடும்பமும் மூங்கில் மரங்களை முறித்து தங்களுக்கு உணவாக எடுத்துக் கொள்ளும். மென்மையான உச்சியிலிருக்கும் இலைகளை நிறைய சாப்பிடும். குட்டி யானைகளுக்கு இது மிகவும் பிடிக்கும். மலைப்பகுதியில் நிறைய புளிய மரங்கள் இருந்தன. புளியங்காய் பழுக்கும்போது 'யானை'யும் அதன் சிறிய குடும்பமும், மற்ற எல்லா யானைகளும் இரவும் பகலும் அந்த மரங்களுக்கு கீழே தங்கியிருக்கும். மரங்களில் கிளைகளை முறித்து பழுத்த புளியம்பழங்களையும் வேண்டிய அளவுக்கு உண்ணும்.

'யானை'க்கு இரண்டு அழகான தந்தங்கள் இருந்தன. ஆனால் அதன் மனைவிக்கு ஆறு அங்குலம் தந்தங்களே இருந்தன. ஏனெனில் பெண் யானைகளுக்கு நீண்ட தந்தங்கள் இருப்பதில்லை.

’ யானை’க்கு இரண்டு ஆண் பிள்ளைகள் : முதல் பிள்ளைக்கு பத்து வயது. ஆனால் தந்தங்கள் வளராத அளவுக்கு சின்னப்பிள்ளை. அதன் பெயர் ஹத்தி. இரண்டாவது பிறந்து ஒரே மாதமான குட்டி யானை.

புதிதாக பிறந்த தன் சகோதரனைப் பார்க்கும்போது ஹத்திக்கு அதிர்ச்சியாக இருந்தது. இளஞ்சிவப்பு நிறத்தில் குட்டி இருந்தது. உடல் முழுவதும் முடிகள் இருந்தன. அது உன் சகோதரன் ’குட்டி’ என்று ஹத்தியின் அப்பா அம்மா கூறும்வரை அது ஏதோ வித்தியாசமான ஒன்று என நினைத்திருந்தான் ஹத்தி.

ஒரு மாதத்தில் குட்டி ஒரு குறும்பான யானைக்குட்டியாக ஆனது. ஹத்தி பார்க்காதபோது குட்டி தன் அம்மாவின் கீழே பதுங்கியிருந்து ஹத்தியின் வாலைப்பிடித்து இழுப்பான். ஹத்தி கோபமானால் உடனே பின்னால் ஓடிப்போய் விடுவான். குட்டி மூங்கில் இலையையோ மற்ற இலைகளையோ உண்ண முடியாத அளவுக்கு குட்டிக்குழந்தை. பழங்களைக்கூட உண்ண முடியாது. குட்டி தன் அம்மாவிடம் பாலைக் குடிப்பான். ஹத்தியை தொந்தரவு செய்வான். ஆனாலும் ஹத்திக்கு குட்டியிடம் நிறைய பாசம். தன் பெற்றோரைவிட ஜாக்கிரதையாக கொன்று தின்னும் புலிகளிடமிருந்து பாதுகாத்து வந்தான். அவன் மூன்றடி உயரம்கூட இல்லை.

குட்டி தன் அப்பாவையும் சீண்டுவான். அப்பாவின் காலடியில் சுற்றிச்சுற்றி விளையாடுவான். அப்பாவின் வால் குட்டிக்கு எட்டாத உயரத்தில் இருக்கும். ஆனாலும் குட்டி அப்பாவின் தும்பிக்கையைப் பிடித்துக்கொண்டு தொங்குவான். அதைப் பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கும். குட்டியின் அப்பா பெரிய மிருகம். ஆனாலும் கோபம் வரவில்லை. தன் குட்டியை அது மிகவும் நேசித்தது. எப்போதுமே அன்பாக மென்மையான மனதுடன் இருந்தது.

இந்த நேரத்தில் கல்கத்தா மிருகக்காட்சி சாலையிலிருந்து காடுகளை பாதுகாக்கும் அரசாங்க அதிகாரிக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அவர்தான் தலைமைப் பாதுகாவலர். ஒரு யானையைப் பிடித்து மிருகக்காட்சி சாலைக்கு கொடுக்குமாறு அக்கடிதம் கூறியது. கல்கத்தாவிற்கு அனுப்புவதற்கு முன்பே அதை பழக்கி அனுப்ப வேண்டும். அது குழந்தைகள் விளையாடுவதற்கு ஏற்றவாறு பழக்க வேண்டும் என்றும் அக்கடிதம் கூறியது. அதை தலைமை அதிகாரி ஏற்றுக்கொண்டு, வனப்பாதுகாவலருக்கு சொல்லி கட்டளையிட்டார். இந்த வனப்பாதுகாவலர் தலைமை அதிகாரிக்கு கீழே வேலை செய்பவர். காட்டின் ஒரு தனிப்பகுதிக்கு பொறுப்பாளர். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர். அவருக்கு கீழே பல பணியாளர்களும் நியமிக்கப்பட்டனர். காட்டைப் பாதுகாக்கவும், யாரும் மரங்களை வெட்டாமலும் வன உயிர்களை வேட்டையாடாமலும் பார்த்துக்கொள்வார். இதேபோல பல வனக்காவலர்கள் எல்லா காட்டிலும் இருப்பார்கள்.

ஆக, யானையைப் பிடிக்கச்சொல்லி உத்தரவு பெற்ற வனக்காவலரின் பெயர் ராம். தன் பணியை அவர் செய்யத் தொடங்கினார். அவர் தன் பணியாளர்களை காட்டு மனிதர்களிடம் கேளுங்கள் என்று கூறினார். காட்டு மனிதர்கள் ’கரும்பர்கள்’ என்று அழைக்கப்பட்டனர்.

காட்டின் ஒரு பகுதியில் வாழ்பவர்கள். யானைகள் வழக்கமாக சுற்றும் இடங்களையெல்லாம் கேட்டு அந்த இடங்களிலெல்லாம் பொறி வைக்க நினைத்தார் அந்த வன அதிகாரி. இந்த கரும்பர்கள் காட்டிலேயே பிறந்து காட்டிலேயே வாழ்பவர்கள். காட்டு விலங்குகளைப்பற்றி நன்கு தெரிந்தவர்கள்.

அவர்கள் ஒரு அதிகாலையில் யானைகளின் வழித்தடங்கள் மற்றும் பொறி வைப்பதற்கான சரியான இடங்களைத் தேடுவதற்கு சென்றனர். மாலையில் அவர்கள் நற்செய்தியுடன் திரும்பினர். யானைக்கூட்டம் செல்லும் மூன்று வழித்தடங்கள் கடந்து வந்தனர். அந்த தடங்கள் காட்டில் ஓடும் சிறு நதிக்கு செல்லும். அங்குதான் பெரிய மிருகங்கள் எல்லாம் ஒரு நாளைக்கு இருமுறை நீர் குடிக்க வரும்.

இதைப்பற்றித் தெரிந்ததும் ராம் தன் பணியாளர்கள் அனைவரையும் சில கரும்பர்களையும் சேர்த்துக்கொண்டார். மூன்றில் முதல் வழித்தடத்தை நோக்கி சென்றனர். சரியாக வழியின் நடுப்பகுதியில் நீண்ட குழியை வெட்டச்சொன்னார் ராம். அது 12 அடி ஆழம் 20 அடி நீளம். அந்த. வழியினுடைய அகலத்திற்கு குழியும் 10 அடி அகலம் கொண்டது.

குழி வெட்ட பல நாட்கள் ஆயின. ஏனெனில் மண்ணைத் தோண்டியெடுத்து சிறிது தூரத்தில் கொட்டியதில் நேரம் அதிகமானது. இது ராமின் தந்திரமான திட்டப்படி நடந்தது. எவ்வளவு முடியுமோ அவ்வளவு ஜாக்கிரதையாக அமைதியாக பணியை முடித்தனர். யானைகளுக்கு பொறி வைத்திருப்பது தெரியாத அளவுக்கு பார்த்துக்கொண்டனர்.

ஒருவழியாக ஒரு பெரிய குழி தயாரானது. எங்கும் பொடிமண் இல்லாமல் நேர்த்தியாக இருந்தது.

ராம் தன் பணியாளர்களை உதிர்ந்த மற்றும் காய்ந்த இலைகளை அக்குழியில் போட வைத்தார். அது மூன்றடி உயரம்வரை நின்றது. மூலை முடுக்கெல்லாம் நிரப்பப்பட்டது. பின்னர் அவர்கள் மூங்கில்களை வெட்டிப்பிளந்து அதைவைத்து ஒரு நீண்ட தட்டியைக் கட்டி குழியை இடைவெளியின்றி மூடினர். அதன்மேல் சில புற்களையும் பூண்டுகளையும் போட்டு பரப்பினர். மூங்கில் தட்டி வெளியே தெரியாத அளவுக்கு பரப்பினர். திறமையாக இப்பணி முடிக்கப்பட்டது. பின்னர் குழி என்று தெரியாதவாறு எல்லா ஜோடனைகளும் செய்யப்பட்டன. அவ்வழி முன்பிருந்ததைப் போன்றே இருந்தது.

கடைசியாக யானைகளைக் கவர்ந்திழுப்பதற்கு மூங்கில் தட்டியின் மேல் இரண்டு தோண்டியளவு புளியம்பழங்களைக் கொட்டி வைக்கச் சொன்னார் ராம்.

யானைகள் இந்த வழியே கடந்து போகும். புளியம்பழக் குவியலைப் பார்க்கும். அதை சாப்பிட வரும். யானையின் உடல் எடையை மூங்கில் தட்டியால் தாங்க முடியாது. முதல் மிருகம் ஏறும்போதே சட்டென தட்டி உடைந்துபோகும். யானை குழிக்குள் விழுந்து மாட்டிக்கொள்ளும். இவ்வாறெல்லாம் நடக்கும் என்று ராம் மனதிற்குள் நினைத்துக் கொண்டிருந்தார். ராம் குழியின் உள்ளே நிறைய காய்ந்த உதிர்ந்த இலைகளைப் போட்டு வைத்தார். இது மெத்தைப்போன்று மென்மையாக இருக்கும். யானை விழும்போது

அடிப்படாமல் தாங்கும். மற்றபடி, யானை பெரிய மிருகம் என்பதால் பனிரெண்டடி உயரத்திலிருந்து விழும்போது யானையின் கால் முறிந்து போகும்.

இறுதியில் எல்லாம் தயார். கடைசியாக பொறியில் ஏதாவது தவறு இருக்கிறதா என பார்வையிட்டார் ராம். பின்னர் தன் பணியாட்களுடன் குடியிருப்புக்கு சென்றார்.கரும்பர்கள் யானை மாட்டிக்கொண்டது என்று கூறும் வரை அமைதியாக காத்திருக்கலாம் என்று நினைத்தார். அவர்கள் நெடுநாள்வரை காத்திருக்கவில்லை.

இரண்டு இரவுகளுக்கு பின்னர், 'யானை'யும் அதன் குடும்பமும் பொறி வைக்கப்பட்ட வழியிலே நடந்து வந்தன.

வழக்கமாக யானைகள் காட்டில் சுற்றும்போது யானையின் மனைவி முன்னால் போகும். 'குட்டி' அதன் பின்னே போவான். பிறகு ஹத்தி. கடைசியாக 'யானை'. அது பலமான யானை. தன் குடும்பத்தின் பாதுகாவலன். அந்த ஆண்யானை குடும்பத்தின் பின்பக்கமாக வரும் ஆபத்தை தடுக்கவல்லது.

பெரிய யானைகள் முன்னால் நடக்கும்போது பின்னால் வரும் யானைக்குட்டிகளை காட்டுப்புலிகள் திடீரென தாக்கும். அதனால் 'யானை' பின்னால் செல்கிறது.

இவ்வாறாக யானைகள் போகும்போது அம்மா யானை ஒரு மூலையில் திரும்பி பொறி வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு வந்தது. அது மூங்கில் படலின்மேல் கால் வைத்தது. ஏதோ ஒரு ஆபத்து உள்ளதென உணர்ந்ததும் சட்டென நின்றது. குட்டியின் தலை அம்மாவின் பின்னங்காலில் இடித்தது. சந்தேகத்தில் முன்பக்கம் கவனமாகப் பார்த்தது. ஏதும் பிரச்சனையில்லை என்பதாக முதலில் தெரிந்தது. ஆனால் அப்போது அந்த புளியம்பழக் குவியல் கவர்த்திழுத்தது. பெண் யானை புளியம்பழங்களை விரும்பியது. அருகில் எந்த புளியமரமும் இல்லாதபோது இங்கு எப்படி புளியம்பழங்கள் வந்தன என ஆச்சரியப்பட்டது பெண் யானை.

அதற்குள் 'குட்டி' அம்மாவின் கால்களுக்கு இடையில் புகுந்து முன்னே புளியம்பழங்களை நோக்கி ஓடினான். ஆனால் அதை சாப்பிடக்கூடிய வயதில்லை அவனுக்கு. குட்டிக்கு புளியம்பழங்கள் மேல் கொள்ளை ஆசை. அதனால் அவன் முன்னால் ஓடி வந்தான். ஆனால் அதற்கான பலனை அவன் பெறப்போகிறான்.

அவன் சின்னவனாக இருந்தாலும் முன்னூறு பவுண்டு எடையுள்ளவன். அதையே அந்த மெல்லிய மூங்கில் தட்டியால் தாங்க முடியாது. அங்கே படல் உடையும் சத்தம் கேட்டது. குட்டி குழிக்குள் விழுந்தான். பெண் யானையின் பார்வையிலிருந்து மறைந்தான்.

ஒருசில நொடிகள் என்ன நடக்கிறது என்று தெரியாமல் திகைத்துபோய் நின்றது பெண்யானை. அது மூங்கில் தட்டியின் ஓட்டை வழியே எட்டிப்பார்த்தது. குட்டி உள்ளே விழுந்து கிடந்தான். அவன் பயத்தில் கத்திக்கொண்டிருந்தான். தன் அம்மாவை மேலே பார்த்தான். அவன் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

குட்டியின் அம்மாவுக்கு வெறிப்பிடித்துக் கொண்டது. பயத்திலும் கோபத்திலும் என்ன செய்வதென்று தெரியாமல் பயங்கரமாக பிளிறியது.

தன் அம்மா பிளிறுவதைக் கண்டு பயந்து ஓடிப்போய் ஒரு மரத்திற்கு பின்னால் ஒளிந்துக்கொண்டான் ஹத்தி. அதே நேரம் 'யானை' தன் மகனையும் மனைவியையும் ஏதோ ஒரு புலி தாக்கிவிட்டதோ என்று நினைத்தது. உடனே முன்னோக்கி ஓடியது. ஓடிய வேகத்தில் குழியில் விழுந்திருக்கும். ஆனால் அதன் மனைவியானை தன் தும்பிக்கையால் 'யானை'யைப் பிடித்துக்கொண்டது. 'யானை' தன் குட்டி மகனுக்கு என்ன நடந்தது என பார்த்தது. அதுவும் கோபமடைந்து செய்வதறியாமல் திகைத்தது. அதன் பிளிறலும் அதனுடைய மனைவியின் பிளிறலுடன் சேர்ந்தது. குழியில் குட்டியும் கத்திக் கொண்டிருந்தான். இந்த சத்தங்கள் காட்டையே உலுக்கின.

அந்த சத்தங்கள்  தூரத்திலிருக்கும் ராம் மற்றும் அவனது பணியாட்களின் உறக்கத்தைக் கலைத்தது. ஒரு யானை மாட்டிக்கொண்டது, நாம் அதிர்ஷ்டம் பெற்றவர்கள் என்று நினைத்துக்கொண்டனர்.

அதே நேரம் தாயும் தந்தையுமான பெரிய யானைகள் இரண்டும் தங்கள் மகனைக் காப்பாற்றும் முயற்சிகள் தோல்வியடைந்ததைக் கண்டு மேலும் நம்பிக்கையற்று போயின.

யானை முட்டிப்போட்டு தன் பலமான தும்பிக்கை, தந்தங்கள் மூலம் தன் மகனைக் காப்பாற்ற நினைத்தது. குழியின் மேலே மூடியுள்ள தட்டியைத் தகர்த்தது. முட்டிப்போட்டு காப்பாற்ற முயன்றபோது மண் சரியத் தொடங்கியது. 'யானை' இரண்டாம் முறை குழியின் உள்ளே விழுந்திருக்கும்.

தன் பங்குக்கு 'யானை'யின் மனைவி சில மூங்கில்களை முறித்து குழிக்குள் போட்டது. மூங்கில்களின் ஒரு முனை குழிக்கு மேலேயிருக்கும் வகையில் போட்டது. குட்டி தன் தும்பிக்கை மூலம் மூங்கிலின் ஒரு முனையைப் பிடித்துக்கொள்வான் என நம்பியது 'யானை'யின் மனைவி. பின்னர் அப்படியே பிடித்து வெளியே இழுத்துவிடலாம் என நினைத்தது. ஆனால் குட்டிக்கு தன் தாயின் திட்டம் புரியவில்லை. ஏனெனில் அவன் இன்னும் குழந்தை.

இரவு முழுவதும் இந்த பெற்றோர் தன் மகனைக் காப்பாற்ற பல முயற்சிகள் செய்து தோற்றனர். ஆனால் தொடர்ந்து முயற்சி மேல் முயற்சி செய்தனர். ஆனால் கிழக்கு வானில் சூரியனின் கதிர்கள் தோன்றின. காலைப்பொழுது புலரப்போகிறது என யானைகள் அறிந்தன.

' யானை' மறுபடியும் குழியின் நுனியில் மண்டியிட்டு தன் முழு தும்பிக்கையை உள்ளே நீட்டியது. அது குட்டியின் தும்பிக்கை நீட்டியும்கூட தொட முடியாமலிருந்தது. இடையில் சற்று இடைவெளியிருந்தது. அங்கே பிடித்துக் கொள்ளவும் ஏதுமில்லை. ஆனால் குழியிலிருந்து மேலே தூக்கும்போது கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுமளவுக்கு சக்தி

குட்டிக்கு கிடையாது. ஏனெனில் அவன் மிகவும் குழந்தை. பலவீனமானவன்.

மலைகளுக்குமேல் சூரியன் எழுந்து வந்தது. 'யானை' தன் எல்லா முயற்சிகளும் தோல்வியுற்றதை நினைத்தது. அது நினைப்பதை தன் மனைவியிடமும் கூறவில்லை. அது பெண்யானையை இவ்வாறு செய்யாதே என்று கத்திக்கூற வைத்தது. 'யானை' கடைசியாக ஒருமுறை தன் குடும்பம், காடு போன்றவற்றைப் பார்த்துக்கொண்டது.

அடுத்த நொடி யானை தானே குழிக்குள் குதித்தது. இப்போது தன் மகனைக் காப்பாற்றுவது 'யானைக்கு ' மிகவும் சுலபம். தன் தும்பிக்கையில் குட்டியை தாய் யானையால் பிடித்துக் கொள்ளுமளவுக்கு, தலைக்குமேலே தூக்கி வெளியே விடுமளவுக்கு தூக்கியது. கடைசியாக அவர்களது செல்ல மகன் காப்பாற்றப்பட்டான். ஆனால் அதற்கான விலைதான் என்னே..!

'உன்னை எப்படி காப்பாற்றுவது.?' என்று 'யானை'யின் மனைவி கேட்டது. அப்போது அதன் குரலில் பயமும் நடுக்கமும் கண்களில் நீரும் தென்பட்டன.

' அய்யோ, என்னால் வெளியே வர முடியாது. ஆனால் பல நாட்களுக்கு நம்மகன் நலமாக இருப்பான். அவனைக் காப்பாற்றியதற்கு நான் பெருமைக் கொள்கிறேன்' என்று கூறியது 'யானை'.

அப்போது மனிதர்கள் வரும் சத்தம் கேட்டது. அவர்களைத் தாக்கி கொன்றுவிடலாம் என்று பெண்யானை நினைத்தது.

ஆனால் 'யானை' அழுத்தமாகக் கூறியது, அவர்களிடம் துப்பாக்கிகள் இருக்கின்றன. உன்னை சுட்டுவிடுவார்கள். ஹத்தியையும் குட்டியையும் கூட சுட்டு விடுவார்கள். இங்கிருந்து உடனே போய்விடுங்கள். என்னைப்பற்றி கவலையே தேவையில்லை. குட்டி பெரியவனாக வளரும்போது அவனது அப்பா அவனுக்காக என்ன செய்தேன் என்று கூறு' என்றது 'யானை'.

வேதனையில் அழுதுக்கொண்டு தன் மகன்களைக் கூட்டிக்கொண்டு சென்றது 'யானை'யின் மனைவி. பிறகு சில நிமிடங்கள் கழித்து ராம் மற்றும் அவனது குழுவினர் அங்கு வந்தனர். குழியிலுள்ள பெரிய யானையைப் பார்த்தபோது அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. யானையை விற்கும்போது அரசிடமிருந்து ஏதேனும் வெகுமதி கிடைக்கும் என நினைத்தனர்.

யானையை பதினைந்து நாட்கள் பட்டினி போட்டனர். 'யானை'யால் நிற்க கூட முடியவில்லை. பிறகு யாரையும் திருப்பித் தாக்க முடியாது என்ற நிலை வந்ததும் கயிறுகள் மற்றும் நன்கு பழக்கப்படுத்தப்பட்ட நான்கு யானைகள் ஆகியவற்றின் உதவியுடன் குழியிலிருந்து யானையை வெளியே தூக்கினர். ஆனால் தங்களைப் பாதுகாக்க வேண்டி முன்னேற்பாடாக அதன் கால்களிலும் இடுப்பிலும் சங்கிலிகளைப் பூட்டியிருந்தனர்.

இப்படியாக பல மாதங்களாக யானை கட்டப்பட்டிருந்தது. சாகாமலிருப்பதற்கு

தேவையான உணவை மட்டும் தந்தனர்.

இவ்வாறாக பல நாட்களாகப் பழக்கப்படுத்தப்பட்டு சகஜமாக அனைத்தையும் ஏற்றுக்கொண்டது 'யானை'.

இப்போதும் அதன் கால்களில் பெரிய இரும்பு சங்கிலிகள் இருக்கின்றன.

ஆறாயிரம் ரூபாய்க்கு அரசாங்கத்திடம் விற்கப்பட்டது 'யானை'. ராமுக்கும் அவனுக்கு உதவியவருக்கும் முன்னூறு ரூபாய் வெகுமதி கிடைத்தது.

யானை ஒரு சிறப்பு பெட்டியில் அடைக்கப்பட்டு ரயிலில் கல்கத்தாவுக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கே ஒரு மிருகக்காட்சி சாலையில் விடப்பட்டது. அது கொஞ்சம் கொஞ்சமாக குழந்தைகளை சவாரி தூக்கிச் செல்லும் விளையாட்டு பொருளாக மாறியது.

பல வருடங்களாக அது இங்கேயே இருக்கின்றது. பலருக்கும் பிடித்தமான யானையாக மாறிவிட்டது. குழந்தைகள் அதை பெரிதும் விரும்பினர். 'யானை'க்கும் குழந்தைகளை தன் முதுகில் தூக்கிக் கொண்டு போவது பிடித்திருந்தது.

அது குழந்தைகளைக் காணும்போதெல்லாம் அதன் கண்களில் சிறிது சோகம் தென்படும். ஒருவேளை அதன் மனமும் ஆன்மாவும் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் போய்விட்டு வரலாம். அதற்கு பிடித்த காட்டுக்கும் பிரிந்த குடும்பத்திடமும் சென்று வரலாம். அது தன் மனைவியையும் ஹத்தியையும் குட்டியையும் பார்க்கலாம். குட்டி பெரியவனாக வளர்ந்து மகிழ்வுடனும் பாதுகாப்பாகவும் இருக்கலாம். வயதான யானை ஒரு பெருமூச்சு விட்டது. ஆனால் தன் குடும்பத்தைக் காப்பாற்ற தன்னை தியாகம் செய்ததை நினைத்து மகிழ்ந்தது.

அங்கே காட்டில் அதன் மனைவி தன் கணவனையே நினைத்துக் கொண்டிருந்தது. என்றும் நினைக்கத் தவறியதில்லை. ஹத்தியும் குட்டியும் தங்கள் தந்தையைப் போன்றே பெரிதாக பலமாக தயாள குணத்துடன் நடந்து கொள்கின்றனர். யானைகள் எப்போதும் எதையும் மறப்பதில்லை.

முற்றும்.

**– கென்னத் ஆண்டர்சன்** (ஆங்கில மூலம்)
– கார்த்தி டாவின்சி (தமிழாக்கம்)

# வரலாற்றின் சுவடுகளில் ராஜமன்னார்குடி

பகுதி 1 : மன்னார்குடியின் சுங்கசாவடி 'சாரிகைக் கோட்டை'

தமிழகத்தின் பண்டைய வரலாற்றிலும் சரி, நிகழ்கால அரசியல் வரலாற்றிலும் சரி, முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஊராக நம் மன்னார்குடி திகழ்ந்து வருகிறது. பிற்கால சோழர் காலத்தில், முக்கியமாக, முதலாம் இராஜாதிராஜ சோழர் காலத்தில் நமது மன்னை மாநகர் மிகுந்த சிறப்புடன், வளம் செறிந்த ஊராக இருந்ததற்கு பல்வேறு வரலாற்று சான்றுகள் காணக்கிடைக்கின்றன.

செண்பகாரண்ய க்ஷேத்திரம், வண்டுவராபதி, தட்சிண துவாரகை, வாசுதேவபுரி போன்ற பல்வேறு புராண பெயர்களால் அழைக்கப்பட்ட நம் மன்னார்குடி, முதலாம் இராஜாதிராஜ சோழர் காலத்தில், நான்கு வேதங்களும் கற்றுணர்ந்த பிராமணர்களுக்கு தானமாக கொடுக்கப்பட்டு, அதன் காரணமாக 'இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலம்' என்று அழைக்கப்பட்டது. 'சதுர்வேதிமங்கலம்' என்றால் நான்கு வேதங்களிலும் தேர்ச்சிப் பெற்ற பிராமணர்களுக்கு இறையிலியாக (எவ்வித வரியும் இன்றி) வழங்கப்படும் ஊர் ஆகும்.

இது மட்டுமின்றி, நமது மன்னைக்கு உள்ள இன்னொரு சிறப்பு, சோழர் காலத்தில் 'தனியூர்' என்ற சிறப்பு அந்தஸ்த்தைப் பெற்றிருந்தது. தனியூர் என்றால், ஒவ்வொரு வளநாட்டிலும் அரசு சிறப்பாக அமைக்கும் ஊர்; இது கூற்றத்தின் தலைமை ஊராகவும் செயல்படும். சோழர் கால கல்வெட்டுகளில் மன்னார்குடி, 'சுத்தவல்லி வளநாட்டு தனியூர் இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலம்' என்று குறிப்பிடப்படுகிறது. நமது இராஜகோபால சுவாமி கோவிலில், வாசுதேவ பெருமாள் சந்நிதியின் வடக்குப்புற கோஷ்ட சுவற்றில் உள்ள கல்வெட்டுகளில் இந்த பெயர் காணப்படுகிறது.

சோழர் காலத்தில் மட்டுமின்றி, அதற்கு பிறகு வந்த பிற்கால பாண்டியர்கள், நாயக்கர்கள், மராட்டியர்கள், பிரிட்டிஷார்களின் ஆட்சியிலும் மிகவும் சிறப்பு வாய்ந்த ஓர் ஊராகவே நமது ஊர் திகழ்ந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

தற்பொழுது நெடுஞ்சாலைகளில் சுங்கச் சாவடி அமைத்து அரசு சுங்கம் வசூலிப்பதை போல், அக்காலத்திலும் சுங்கச்சாவடிகள் இருந்துள்ளன. சங்ககாலம் தொட்டே தமிழகத்தில் சுங்கச் சாவடிகள் வழக்கில் இருந்துள்ளன. அவ்வாறாக, விக்கிரம பாண்டியன் என்ற பாண்டிய மன்னனின் காலத்தில், நமது ஊரில், 'சாரிகைக் கோட்டை' என்ற பகுதியில் சுங்கசாலை ஒன்று செயல்பாட்டில் இருந்துள்ளது. இந்த தகவல், மன்னை ஜெயம்கொண்டநாதர் கோவிலின் முன்மண்டப வாயிலின் நிலையில் உள்ள,

பாண்டியர் கால கல்வெட்டுகளில் உள்ளது.

சாரிகைக் கோட்டை என்பது தற்போது அண்ணாமலையார் கோவில் அமைந்திருக்கும் பகுதி என்பதும் கல்வெட்டு தகவல்களின் மூலம் அறிய முடிகிறது. இந்த சாரிகைக் கோட்டை, பாண்டியர் காலத்தில் வணிகர்கள் பாதுகாப்பாக தங்கி செயல்பட்ட பகுதியாகும். சாரிகைக் கோட்டையில் வணிகர்கள் தங்கியிருந்த இடம், 'புவனேகவீரன் மடிகை' என்றும், 'விக்கிரம பாண்டியன் மடிகை' என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது. இந்த வணிகக் குழுவினர் 'பதினெண் விஷயம்' என்ற பெயரால் அறியப்பட்டுள்ளனர். இந்த 'பதினெட்டு விஷயம்' வணிகக் குழுவினரும், நகரத்தாரும் இணைந்து ஜெயம்கொண்டநாதர் கோவில் திருப்பணிக்கு பல்வேறு பொருளுதவி செய்துள்ளனர்.

இந்த சாரிகைக் கோட்டை பகுதியில் புகுந்தோ, புகாமலோ செல்லும் ஒவ்வொரு பாக்குப் பொதிக்கும், ஒரு உழக்கு பாக்கு சுங்கமாக வசூலிக்கப்பட்டுள்ளது. இதேபோல் மிளகுப் பொதி ஒன்றுக்கு ஒரு உழக்கு மிளகும், துணி மூட்டை ஒன்றுக்கு மாகாணி பணமும் சுங்கமாக வசூலிக்கப்பட்டுள்ளன. இப்படி சுங்கமாக வசூலிக்கப்பட்டவை, ஜெயம்கொண்டநாதர் கோவிலில் உறையும் இறைவனின் கறியமுதுக்கும், அக்கோவிலின் திருப்பணிக்கும் பயன்படுத்தப்பட்டு வந்த செய்தி, அக்கோவிலில் உள்ள பாண்டியர் கல்வெட்டுகள் மூலம் புலனாகிறது.

இவ்வாறாக நம் மன்னார்குடியில், பாண்டியர் காலத்தில் சுங்கம் வசூலிக்கும் சுங்கச் சாலையாக 'சாரிகைக் கோட்டை' பகுதி செயல்பட்டு வந்துள்ளது.

மன்னையின் வரலாறு தொடரும்....!

தகவல் உதவி : திருவாரூர் மாவட்ட தொல்லியல் வரலாறு.

எழுத்தாக்கம் : அபிராமி பாஸ்கரன்



# மண்பானையும் உடல்நலமும்



விக்னேசு மன்னை

மண்பானை ஒரு மிகச் சிறந்த நீர் சுத்திகரிக்கும் கருவி. மண்பானையில் தண்ணீரை ஊற்றி வைத்து மூன்று மணி நேரம் முதல் ஏழு மணி நேரம் வைத்திருந்தால் அந்த தண்ணீரில் உள்ள அனைத்து கெட்ட பொருள்களையும் மண் பானை உறிஞ்சிக் கொண்டு அந்த நீருக்கு மண் சக்தியை அளிக்கிறது. எனவே உலகத்திலேயே மிகச் சிறந்த நீர் சுத்திகரிப்பான் மண்பானை ஆகும். எனவே தண்ணீரை மண்பானையில் வைத்துக் குடித்தால் அதில் பிராண சக்தி அதிகரிக்கும்.

குளிர்சாதன பெட்டியில் வைத்திருக்கும் தண்ணீரை எடுத்து 15 நிமிடங்களுக்கு கழித்து குடிக்க வேண்டும் அப்படி குடித்தாலும் தாகம் அடங்காது உடல்நலத்திற்கு கேடு விளைவிக்கும் . ஆனால் மண்பானை தண்ணீர் இயற்கையாகவே தண்ணீரை தாகம் எடுக்கும் போதெல்லாம் உடனே அருந்தலாம். குளிர்சாதன பெட்டி தண்ணீரை காட்டிலும் மண்பானை தண்ணீரே மிக சிறந்தது. மேலும் வெட்டிவேர், எலுமிச்சை, புதினாவையும் தண்ணீரில் சேர்த்தால் இன்னும் குளிர்ச்சியாக இருக்கும். உடலுக்கு மிகவும் நல்லது. மண்பானைகளை வைப்பதற்கு முன் கீழே மணல் போட்டு அதன் மேல் மண்பானை வைத்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

இளம் தென்றல் காற்று, வழிந்து ஓடும் நதி, வெண் மேகமாய் கொட்டுகிற அருவி, கால்களில் மிதிபடும் பனித்துளி… என்பது போல கொளுத்துகிற வெயிலில் வெளியில் சுற்றிவிட்டு வந்தவுடன் ஆசுவாசப்படுத்திக் கொள்ள குளிர்சாதன பெட்டியை திறந்து உடலுக்கு தீங்கு விளைவிக்கும் குளிர்பானங்களை சாப்பிடுகிறோம்.

இப்போது காலம் மாறி, விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. வெயிலுக்கு சூடு ஆற்றி கொள்ள ஒரு குவளை மோர், கொஞ்சம் எலுமிச்சை பழச்சாறு அல்லது இரண்டு கீற்று நுங்கு என்று இயற்கை உணவுக்கு மாறிக் கொண்டே வருகிறோம்.

குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருக்கும் தண்ணீரைவிட மண்பானையில் வைத்திருக்கும் நீரை விரும்பி அருந்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இயற்கையோடு இணைந்திருப்பதே இன்பம் என்ற முடிவுக்கு நாம் கொஞ்சம் கொஞ்சமாய் திரும்பிக் கொண்டிருக்கிறோம்.

மேலும் விஞ்ஞானிகள் அதிக மின்சாரத்தை காலி செய்து தண்ணீரைக் குளிர வைப்பதற்குக் கண்டுபிடித்த குளிர்சாதன பெட்டி தொழில்நுட்பத்தை, ஆடம்பரமே இல்லாமல் சாதாரணமாக நம்மூர் கிராமத்து விஞ்ஞானிகள், வெறும் மண்பானையை வைத்தே செய்து காட்டிவிட்டார்கள்.

மண்பானையின் பெரிய ஆச்சரியம் என்னவென்றால், வெளியில் வெயில் பட்டையைக் கிளப்பும்போது மண்பானை தன்னுள் இருக்கிற நீரை அதிக அளவு குளிரச் செய்யும். வெளிப்புறத்தில் வெயில் குறைவாக இருந்தால் மண்பானையில் உள்ள நீரும் குறைந்த அளவே

குளிர்ந்து இருக்கும்.

கடும் கோடையில் உடலுக்கு இதமாக, ஒரு மண்பானை நீரை நன்றாகக் குளிரச் செய்து கொடுக்கிறது என்றால் அது எவ்வளவு பெரிய வரப்பிரசாதம்

மண்பானையில் உள்ள சிறிய நுண் துளைகள் வழியேதான் இப்படி நீர் கசிகிறது. இந்த நீர் தொடர்ந்து ஆவியாகிக் கொண்டே இருக்கிறது. இப்படி பானையின் வெப்பமும், பானையின் உள்ளே இருக்கும் நீரில் உள்ள வெப்பமும் தொடர்ந்து ஆவியாதல் மூலம் வெளியேற்றப்படுகிறது. எனவே நீர் குளிர்ந்த நிலையிலேயே இருக்கிறது

உலகத்தில் எந்த ஒரு மூலையிலும் நீங்கள் எது வேண்டாம் என்றாலும் இருந்து விடலாம் ஆனால் தண்ணீர் இல்லாமல் வாழ முடியாது. பல காலங்களுக்கு முன்பு காவிரி ஆற்று நீரும், பூமிக்கு அடியில் நாம் பயன்படுத்தி வரும் தண்ணீரும் நமக்கு தேவையான உடம்பில் உள்ள அயோடின் தாதுப்பொருள் தந்துள்ளது. ஆனால் இப்போது அதன் நன்மை நாம் கடையில் வாங்கும் பொத்தல் தண்ணீரிலோ அடைக்கப்பட்ட குளிர்பானங்களிலோ அது கிடைப்பதில்லை. சுமார் பல கோடி கொள்முதல் கொண்டு இந்தீய நாடும் அதன் சார்ந்த வணீக தாரர்களும் அவர்களுக்கு பணம் சம்பாதிக்க தொடங்கி உள்ளார்கள்.

மேலும் இந்த வணீக தாரர்கள் அவர்களுக்கு தேவையான பணம் சம்பாதிக்க முழுவதுமாக பொத்தல் தண்ணீரையும், 20லி பொத்தல் தண்ணீரையும் கொண்டு சேர்ப்பதற்கு விளம்பரங்களுக்கும் கொடுக்கிறார்கள். இவ்வாறு பயன்படுத்தபடும் குடிநீரில் நாம் உடலுக்கு தேவையான தாது பொருள்கள் நிறைந்தவையா என ஆராய்ந்தால் இல்லையென்ற பதில் மட்டுமே வருகிறது.

பிரபல தொழில்நுட்பம் மூலம் இப்போது வளரும் எல்லா பெருநிறுவனங்களும் அதன் ஆளுமையை வைத்து தூசி கலந்தாலும் அதை வடிகட்டுகிறோம் என்ற பெயரில் அதில் உள்ள மனிதருக்கு தேவைப்படும் தாது பொருள்களை பிரித்து எடுத்து வெறும் சக்கை குடிநீராக பொத்தலில் அடைத்து விற்பனை செய்யப்படுகிறது. இந்த கோடையில் தொற்று நோய்களை தடுக்க, இதை முயற்சி செய்யலாம், அதில் நம்ம செய்ய வேண்டியது என்னவென்றால் சிறிது மிளகு (25 கிராம்), தேங்காய் ஓடு ஒன்றை எடுத்து கொள்ளவும்,வெட்டி வேர் சிறிது,வெந்தையம் சிறிது (20 கிராம்), சீரகம் சிறிது (25 கிராம்).

இவைகளை எல்லாம் நமக்கு தேவையான எடுத்து வைத்து கொண்டு அதை மிகவும் பக்குவமாக ஒரு துணியில் கட்டி அதை பதினைந்து முதல், இருபது லிட்டர் தண்ணீரில் கட்டியபப்டி அப்படியே ஒரு நாள் முழுவதும் இட்டு அதை குடித்து வந்தால் நமக்கு உண்டாகும் தொற்று நோயாக இருந்தாலும் தொழுநோயாக இருந்தாலும் குணமாகும்.

**– விக்னேசு மன்னை**
மன்னார்குடி

# துபாய் குறுக்கு சந்து அல்ல!



செந்தில்குமரன்
மன்னார்குடி

துபாய் என்றதும் நம் நினைவுக்கு வருவது பாலைவன மண்ணும், அதிலே மேயும் ஒட்டகமும் தான். அதையும் தாண்டி துபாய் குறுக்கு சந்து, துபாய் என்ற வடிவேலுவின் நகைச்சுவை காட்சியும் நினைவுக்கு வந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதையெல்லாம் தாண்டி இன்று உலகமே வியந்து பார்க்கும் வகையில் துபாய் உயர்ந்துள்ளது என்றால் அவர்கள் அப்படியென்ன செய்திருப்பார்கள்?

கொட்டிக் கிடக்கும் இயற்கை வளங்களை கொள்ளை அடித்துக் கொண்டிருக்கும் நாடுகளிடையே, இயற்கை வளமே இல்லாத நாடு ஒன்று, சுற்றுலா மற்றும் வர்த்தக மையமாக திகழ்கிறதென்றால் நம்ப முடிகிறதா?

அவர்களிடம் எண்ணெய் வளங்கள் உள்ளது, அந்த பணத்தைக் கொண்டு நாட்டை மேம்படுத்தி உள்ளார்கள் என்று நினைப்பீர்களெனில், அதன் மூலம் வருமானம், நாட்டின் மொத்த வருமானத்தில் ஒரு சதவீதத்துக்கும் குறைவே.

ஏழு அரபு நாடுகள் இணைந்து, ஐக்கிய அரபு நாடுகள் (United Arab Emirates) என உருவாக்கியுள்ளனர். அதில் ஒன்று தான் நாம் பார்க்க போகும் துபாய்! இந்நாட்டின் மன்னர், மன்னராக ஆட்சி புரியாமல் ஒரு தொழிலதிபர் எவ்வாறு தனது தொழிலை விரிவாக்க முயற்சிப்பாரோ அந்தளவுக்கு தனது உழைப்பைக் கொடுத்துள்ளார். ஒவ்வொரு நாட்டிற்கும் ஏதாவது ஒரு இயற்கை வளம் இருக்கும், இந்தியாவில் தமிழகத்தை எடுத்துக் கொண்டால் உழவுத் தொழிலை நம்பி மக்களின் வாழ்வாதாரம் அமைந்துள்ளது. அதே போல, துபாய் மக்களின் வாழ்வாதாரம், அந்நாட்டின் சுற்றுலாத்துறையையும், வர்த்தக மையத்தையும் நம்பி உள்ளது. இவர்களின் மனத்திறன், கண்டுபிடிப்பு, பிரச்சினையை தீர்க்கும் பாங்கு மற்றும் வியூகம் தான் இந்தளவிற்கு உயர்த்தியுள்ளது.

இவர்கள் எந்த ஒரு செயலிலும் இது போதும், இந்த வருமானம் மூலம் இதை சமாளித்துக் கொள்ளலாம் என கருதாமல் புதிது புதிதாக அனைத்திலும் அறிமுகப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். உதாரணத்திற்கு அங்குள்ள Miracle Garden சென்றீர்கள் என்றால், கடந்த ஆண்டு காட்சிப்படுத்தப்பட்ட பூக்களால் ஆன வடிவமைப்புகளை இந்த வருடம் வேறு ஒரு வடிவத்திற்கு மாற்றி இருப்பார்கள். இப்படி அனைத்திலும் வருடாவருடம் புதுமையை புகுத்திக் கொண்டே இருக்கிறார்கள். ஏற்கெனவே உலகின் மிக பெரிய கட்டிடம் என பெயர் பெற்ற புர்ஜ் கலிஃபா இருந்தாலும், தற்போது அதனைக் காட்டிலும் உயரமான ஒரு கட்டிடத்தை கட்டி முடிக்கும் தருவாயில் உள்ளார்கள். கடலில் புதிது புதிதாக தீவுகளையும், தீவுகளின் மீது வித்தியாசமான கட்டிடங்களையும் கட்டி விரிவுப்படுத்தி வருகிறார்கள்.

அடுத்ததாக ஆடை கலாச்சாரத்தைப் பற்றி பார்ப்போம். இதைப் பொறுத்தவரை நடுநிலையில் உள்ளனர். நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளையும், தொழிலதிபர்களையும் சிரமத்திற்கு உள்ளாக்காமல், இசுலாமிய ஆடை விதிமுறைகள் வர்த்தகத்தை பாதிக்காத வகையில்

கோட்பாடுகளை வகுத்துள்ளனர்.

தற்சார்பு பொருளாதாரத்தைக் கையிலெடுத்தவர்கள், தற்சார்பு நகரத்தையும் உருவாக்கியுள்ளார்கள். உலகிலேயே மிக பெரிய சூரிய சக்தி மின்னாலையை நிறுவி உள்ளார்கள். ஒவ்வொரு செயலும் வீணாகி விடாமல் மறு சுழற்சி செய்யும் வகையில் அனைத்தையும் வடிவமைத்து வருகிறார்கள். சுருக்கமாக கூற வேண்டும் என்றால், மறுசுழற்சி நாடாக கூடிய விரைவில் மாறி விடுவார்கள்.

உலகிலேயே முதல் முறையாக அரசு அலுவலக சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை, செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) மூலம் உடனுக்குடன் தீர்க்கும் வகையில் உருவாக்கியுள்ளார்கள்.

நம் நாட்டை போல அல்லாமல் இங்கு தொழில் துவங்குவது மிக சுலபம், உங்கள் தொழிலுக்கு ஏற்றவாறு இடத்தையும் உங்களுக்காக உருவாக்கி தருவார்கள். அதே சமயத்தில் அந்த தொழில் நாட்டு மக்களையும், நாட்டுக்கும் பாதிப்பு விளைவிக்காத வகையில் இருந்தால் மட்டுமே அனுமதி வழங்குவார்கள்.

இங்கு நிறைய சம்பாதிக்க வேண்டுமென்றால் அதிக உழைப்பும் திறமையும் அவசியம். எந்த நாட்டு மக்கள் அதிக உழைப்பை கொடுக்கிறார்கள் என்பதை தெரிந்து கொண்டு, அவர்களை வேலைக்கு அமர்த்தி அவ்வேலையை கச்சிதமாக முடித்துக் கொள்கிறார்கள். இது தான் இவர்களின் மூலதனமே. ஒரு வேலையை சுலபமாக்க என்ன செய்ய இயலுமோ, அத்தனையும் செயல்படுத்திடுவார்கள். போக்குவரத்து சாலைகள், விதிமுறைகள், மெட்ரோ இரயில், தற்போது ஹைபர் லூப் வரை என அனைத்தும் அடங்கும்.

எல்லா நாடுகளும் நம்மையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதில் துபாய் தெளிவாக இருக்கிறது. ஒரு சிறிய செயலைக் கூட உலகமே ஊர் கூடி வியக்கும் வகையில் செய்கிறது. புதிய கண்டுபிடிப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் துபாய், அது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் எவ்வகையில் பயன்படும் என்பதை அலசி ஆராய்ந்தே பிறகே வெளியிடுகிறது. அதனாலேயே உலகின் முன்னணி நிறுவனங்கள், தங்களது தயாரிப்புகளை துபாயில் வெளியிடுகிறது. இங்கு வெளியிடும் பட்சத்தில் உலகமே அதை பார்க்கும், ஏனெனில் உலகின் வர்த்தக மையமாக துபாய் திகழ்கிறது. ஆறுகளே இல்லாத நாட்டில் கடல் நீரை, ஆறு போல நாட்டுக்குள் வரவழைத்து அதில் படகு சவாரி, கடல் மேலேயே கட்டிடங்கள் என ஆச்சிரியப்பட வைக்கிறார்கள்.

எந்த நாட்டுடன், எந்த நிறுவனத்துடன் கூட்டுறவு வைத்துக் கொண்டால் நமக்கு லாபம் மற்றும் பாதுகாப்பு என்பதை தெளிவாக தெரிந்துக் கொண்டுள்ளனர். சிறிய நாடாக இருந்தாலும், சிறப்பாக கட்டமைக்கப்பட்ட நாடாக துபாய் இருக்கிறது. இவர்களின் மறைமுக பலமே, சிறிய நாடாக இருப்பது தான். உலகிலேயே முதல் ஏழு நட்சத்திர விடுதி (7 Star Hotel), மிக பெரிய கோபுர கட்டிடம் மற்றும் வணிக வளாகங்களைக் (Shopping Mall) கொண்ட நாடாக துபாய் விளங்குகிறது.

அதிக வருமானம் வேண்டுமென்றால்
அதிக செலவு செய்தாக வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர். செய்யும் செலவு மலிவாக

இருப்பதைக் காட்டிலும், செலவிலிருந்து வருமானம் வரும் வகையில் அமைத்துக் கொள்கிறார்கள். எங்களைப் போல, உலகில் யாரும் இருக்க முடியாது, நாங்களே முன்னோடியாக இருப்போம் என்பதில் முனைப்பாக உள்ளனர்.

அன்றைய மணல் நகரம், உலகின் இன்றைய வர்த்தக மையமாக மாறி இருக்கிறதென்றால் உழைப்பின் முக்கியத்துவத்தை நாம் உணர வேண்டும். தொழில் முனைவோர், கண்டிப்பாக சென்று பார்க்க வேண்டிய இடங்களில் துபாயும் ஒன்று. அடுத்த இதழில் உலகின் மிக பெரிய கோபுர கட்டிடமான புர்ஜ் கலிஃபா பற்றி பார்ப்போம்!

- இரா. செந்தில் குமரன்
மன்னார்குடி

---

# அம்மாயி


அருள்பாண்டியன்

இங்க எல்லாருக்கும் இரண்டு பாட்டி, இரண்டு தாத்தா இருப்பாங்க.
ஒருத்தவங்க கூடவே இருப்போம், இன்னொருத்தர போய் தான் பார்ப்போம், அது
அம்மாயி பாட்டன்.

அம்மாயி தான் நாம பிறக்கும் போது இன்னொரு அம்மாவா இருக்குற ஆளு.
இன்றைக்கு நிறைய குழந்தைகளுக்கு அம்மாயின் பாசம் கிடைப்பதில்லை.
இங்கு நான் இழந்த அம்மாயி பத்தி தான் சொல்ல போறேன்.

அம்மாயி! நான் மறந்து போகல,
ஆனா நித்தம் உன்ன நினைக்கல. ஆனா, நினைக்கும் போதெல்லாம் கண்ணீர் விடுவேன் அம்மாயி.

நான்அம்மாவுக்கு இரண்டாவது மகனா பிறந்தேன். அண்ணனுக்கு வயசு ஒன்றரை பிறந்ததும் என்னை ஏந்தியபடி மறு அன்னை ஆனாய்.

எனக்கு என்னவெல்லாம் பணிவிடை செய்தாய் என்று நினைவு கூறும் வயதில்லை அப்போது.

எனக்கு நினைவு தெரிந்து கோடை விடுமுறை என்றால் எங்கள் மூன்று பேரின் புத்தக பை துணி வைக்கும் பையாக மாறி போகும். எப்போது கோடை விடுமுறை என காத்திருப்போம் உன்னை காண்பதற்கே!

என் தாய் பிறந்த வீட்டுல செல்வங்கள் நிறைய இல்லை. எங்க அம்மாயியின் பாசம் தான் நிறைந்திருந்தது. மூன்று மகன்களை திருமணம் செய்து வைத்தும் தனியே தான் சமைத்து சாப்பிட்டாய். யாரையும் சத்தமாக கூட பேசியதில்லை. என் அப்பா வந்தால் முடியாத வயதிலும்

எழுந்து நிற்பாய்.

நாங்கள் வந்து விட்டால் உனக்கு மகிழ்ச்சியும் வரும், துக்கமும் வரும். மகிழ்ச்சி நாங்கள் வருவதால் இருக்கும், துக்கம் மூனு பேருக்கு நல்லதா வாங்கி சமைச்சு போட முடியலையே னு இருக்கும். அந்த வருத்தத உன் கண்ணுல பாத்திருக்கேன். எழுபது வயசுலயும் அம்மியில அரைச்சு கொடகல்லுல மாவாட்டி
நீ செய்யுற சமையல் என் அம்மாவுக்கு கூட வராது. உனக்கு நிகரா சமைக்க யாருமே இப்போ இல்ல அம்மாயி!

உனக்கு பசி இருந்தும் எனக்காக நிறைய வச்சிட்டு கொஞ்சமா சாப்டுவ இல்லனா புடிக்காதுனு சொல்லுவியே அம்மாயி.
எனக்கு பிடிச்ச சாப்பாடுனா, அத நீ சாப்பிடாம வச்சிருந்து மறுநாளும் போடுவியே, அந்த அன்பு இனி அங்க யார்கிட்ட இருக்கும் அம்மாயி!

ஊர் திருவிழாக்கு வர சொல்லுவியே அம்மாயி, இப்போ யாரும் கூப்டுறதே இல்ல அம்மாயி.
கூப்பிட்டாலும் நீ இல்லாத திருவிழா வெறுமை அம்மாயி!

முடி வெட்டி வந்தா, குளிக்காம உள்ள விடமாட்ட. என் தலைக்கு எண்ணெய் தேய்ச்சு விட்டுருக்க, எண்ணெய் தேய்த்து குளிக்க வச்சிருக்க, என் அம்மா செய்யுற எல்லாமே எனக்கு செஞ்சியே அம்மாயி!

நீ ஆசை பட்டு எதையும் கேட்டதில்லை,
உன்ன சரியா கவனிக்க கூட யாரும் இல்லையே அம்மாயி!

என் அம்மா வந்து உனக்கு பணிவிடை பண்ற பாக்கியத்தை கூட கொடுக்கலையே அம்மாயி!

ஆட்டு கொட்டகை பெருக்கி கடைசி வரைக்கும் நோய்னு படுக்கையில் படுக்காம அப்டியே போய்ட்டா என் அம்மாயி!

உன் கூட இருந்து உனக்கு ஒரு ஒத்தாசை பண்ணதுல எனக்கு சின்ன மகிழ்ச்சி.
ஆனா, நான் உனக்கு எதுவுமே வாங்கி தர முடியல அம்மாயி,
அத நினைக்கும் போது என் கண்கள் ஆறாக பெருகுது அம்மாயி!
அந்த துக்கத்தை எங்க போயி தீர்ப்பேனோ தெரியாது அம்மாயி!
எனக்கு உன்கூட இருந்ததெல்லாம் சொல்லி உன் கிட்ட அழனும் போல இருக்கு அம்மாயி!
ஆனா அது நடக்க வாய்ப்பில்லையே அம்மாயி!
நீ இல்லாத அந்த வீடு கூட கூட இப்போ இல்ல அம்மாயி!
உன் நினைவா உன் புடைவை தான் இருக்கு அம்மாயி!

நீ நடுப்புள்ளனு கூப்டுறது இன்னும் எனக்கு கேட்டுகிட்டே இருக்கு அம்மாயி!
ஆத்தா ஆத்தா னு தான் உன்ன கூப்டுருக்கேன் அம்மாயி!
என் அப்பாயிய கூட கிழவினு சொல்லிருக்கேன், ஒரு தடவ கூட எங்கேயும் வாய்தவறி உன்ன சொன்னதில்லை அம்மாயி!
நான் சம்பாரிக்குறதுக்கு முன்னாடியே போய்ட்டியே அம்மாயி!

பல நாள் உன் புடவைய போத்திக்கிட்டு
தூங்கிருக்கேன் அம்மாயி!
உனக்கு நான் சம்பாரிச்சு ஒரு சேலை வாங்கி தரனும்னு ஆசைப்பட்டேன் அது கூட எனக்கு குடுத்து வைக்கல அம்மாயி!
நீ இறந்ததுல இருந்து என் கனவுல வரல ஆனா இப்போ வந்தியே அம்மாயி உனக்கு என்ன ஆசனு கனவுல கூட சொல்லலேயே அம்மாயி
ஏன் வந்தனு எனக்கும் புரியல அம்மாயி!

இன்னிக்கு முழுசும் உன் நினைப்பு தான் அம்மாயி
ஆனா உன்பேருல ஏதாவது பண்ணுவேன் அம்மாயி
உன்ன போல உள்ளவர்களுக்கு!

அம்மாவை இழந்தவங்க தன்னோட அம்மாவே தனக்கு மகளா பிறக்கணும்னு வேண்டுவாங்க, நான் என் அம்மாயி என் மகளா எங்க வீட்டுல பிறக்கணும்னு வேண்டுறேன். அம்மாயி உனக்கு நான் ஆசை பட்டதெல்லம் செய்யணும் அம்மாயி, எப்போதும் உன் நினைப்பு இருக்கும் அம்மாயி.

---

**சி.அருள்பாண்டியன்**
( தொழில் முனைவர் e-commerce )
பூவனுர்
தொடர்புக்கு
பகிரி 8973204042
மின்னஞ்சல்: Pandiana849@gmail.com



ஓவியம்
S. நிகிதா
LKG
SBV பள்ளி

# ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது எந்தெந்த துறைகளில் வரவேண்டும்?

நம் நாட்டின் வளர்ச்சி எந்த அளவில் உள்ளது? அடிப்படையில் மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் ஒரு அரசு?

கல்வித்துறை எந்த அளவில் உள்ளது? பெரும்பாலான பள்ளிகள் தனியார் வசம் விளைவு,பிள்ளைகளைப் பெற்றவர்கள் ஓடி ஓடி உழைத்து பெரும்பகுதி பள்ளிக் கட்டணத்துக்கேப் போய்விடுகின்றது. ஏன் இந்த நிலை? ஒரு அரசு மக்களுக்கு செய்ய வேண்டிய கடமை என்ன? அரசு பள்ளிகளின் இன்றைய நிலை என்ன? அரசுப் பள்ளிகளின் கட்டமைப்பு,போதிய ஆசிரியர்கள் இல்லாமை, குடிநீர், கழிப்பிட வசதி இல்லாமை,கட்டிட வசதி கூட இல்லாமல் மரத்தின் கீழ் வகுப்பறை இவைகளுக்கு யார் பொறுப்பு? அரசியல்வாதிகள் இலவசமாக கொடுக்கும் பொருட்களுக்கு கோடிக்கணக்கில் செலவு செய்வதை இதற்கு செய்யலாமே! அடிப்படை வசதியில்லாத பள்ளிகளை கணக்கெடுத்து அவற்றை சரி செய்தால் கல்வித்தரம் உயருமல்லவா! தனியார் வசமாகியதால் கல்வி கட்டணம் இஷ்டம்போல் வசூலிக்கின்றனரே, அதற்கு யார் பொறுப்பு ?

அடுத்தபடியாக சுகாதாரம் அதுவும் இப்போது தனியார் வசம், அரசு மருத்துவமனைகளில் எத்தனை மருத்துவமனை அடிப்படை வசதிகளோடு சிறப்பாக செயல்படுகின்றன? விரல்விட்டு எண்ணும் அளவில்தான் உள்ளது. தனியார் வசம் மருத்துவத்திற்கான கட்டணத்தை ஒருவர் செலுத்த ஒன்று சொத்தை விற்கணும் அல்லது வாழ்நாள் முழுக்க கடனுக்கு வட்டி கட்டியே சாகணும். மக்கள் தொகைக்கு தகுந்தாற்போல் மருத்துவமனைகளும் மருத்துவர்களும் நியமனம் செய்யவேண்டியது அரசின் கடமையல்லவா?

உணவு விநியோகத்தில் அரசின் நிலை இலவச அரிசி, வேஷ்டி மற்றும் சேலை. இது எத்தனை சதவீதம் உரியவர்களுக்கு சென்றடைகின்றது? பெரும்பகுதி கள்ளமார்க்கெட்டில் கடத்தப்பட்டு அண்டை மாநிலங்களில் விற்கப்படும் அவலநிலை. எங்கும் கலப்படம், எதிலும் கலப்படம். குறுக்கு வழியில் சம்பாதிக்க லஞ்சம் கொடுத்து தவறுக்கு மேல் தவறு செய்யும் கூட்டம் ஒருபுறம், அந்த கலப்பட உணவைத் தின்று நோயுடன் மருத்துவமனைகளுக்கு அலையும் கூட்டம் ஒரு புறம்! ஏன் இந்த அவலம்? இதற்கு யார் பொறுப்பு?

எந்த துறைகளை எடுத்தாலும் லஞ்சம், ஊழல் தலைவிரித்தாடுகிறது. போக்குவரத்து துறையில் பணத்தை வாங்கிக்கொண்டு லைசென்ஸ் கொடுக்கின்றான். தினம் தினம் விபத்துக்கள்,மரணங்கள். தவறு செய்பவன் வசதி உள்ளவனாக இருந்தால் தண்டனையில் இருந்து தப்பித்து விடுகிறான். அங்கும் ஊழல். அரசே என்றைக்கு மதுக்கடைகளை திறந்ததோ அன்றே நாட்டின் கேடுகாலம் ஆரம்பித்து விட்டது.




நன்மக்களுக்குத் தேவை விழிப்புணர்வு, நமக்கென்ன என்று இராமல் நம்மால் நாட்டின் நலன் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து நாட்டின் நலம் பேணுவோம்.

நெல்லை மு.தமிழ்த்தியாகன்
+91 8838513215

## மன்னார்குடி ரா. ராஜேஷ்

எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 10)



# செண்பக வனம்

மலையரசரே தொடர்ந்தார் ‘‘உங்களின் தீர்க்க தரிசனத்திற்கு முன்னால் நாங்கள் சிறுபதர்கள், நீங்கள் சொன்னது முற்றிலும் உண்மை .நீங்கள் வருவதற்கு முன் நான் இந்த விவரங்களைத் தான் இளவரசரிடம் பேசிக்கொண்டிருந்தேன்‘‘ என்றார்.

‘‘ஹா ஹா ஹா ஹா!‘‘
‘‘தீர்க்கதரிசியா? நானா?
மலையரசரே நீங்கள் எனக்கு தந்த பட்டம் முற்றிலும் தவறானது. நான் தீர்க்கதரிசியாக இருந்திருந்தால் சோழ தேசத்திற்கு இச்சூழ்நிலையை நேர்ந்திருக்க விட்டிருக்க மாட்டேன். வழக்கத்திற்கு மாறாக, முச்சந்தி சத்திரத்தில் அதிக கூட்டம் இருக்கிறது, என்னவென்று பார்க்க வேண்டும் என்ற ருத்ரனின் ஓலை கிடைத்த நேரத்திலிருந்து ஏதோ ஒரு அசம்பாவிதம் நடக்கப்போகிறது, அதனை தடுக்க வேண்டும் என்று உள்ளுக்குள் ஒரு உணர்வு. ஒரு மனக்கசப்பு! ஒரு மனப்பதற்றம்!.‘‘ இதேபோன்றதொரு நிகழ்வு இதற்கு முன்னாலும் எனக்கு நடந்திருக்கிறது, அது என்றைக்கு என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் ஆதித்த கரிகாலர் சதிவலையில் கொல்லப்பட்ட தினம். அதற்கான விடை தேடி இவ்வளவு நாட்களாக அலைந்து கொண்டிருக்கும் நிலையில் மீண்டும் அதே போல் ஒரு அசம்பாவிதம் நடப்பதற்கு உண்டான உணர்வு என்னுள் ஏற்பட்டிருக்கிறது ஆனால் இம்முறை அதை நடக்க விடமாட்டேன் என்று உணர்ச்சி ததும்ப கூறினார் அருள்மொழித்தேவர்.

இவர்களின் உரையாடல்களுக்கு நடுவே வெளியே சென்ற சசிதரன் கையில் இரண்டு ஓலைகளுடன் உள்ளே வந்தார். இரண்டையும் வாங்கிப் படித்த அருண்மொழித்தேவர், சசிதரா திறமையான வீரர்களுடன் திருக்கோவிலூர் நோக்கி வரச்சொல்லி அம்பலவாணனுக்கு ஓலை அனுப்ப சொல்லு. எத்தனை விரைவாக முடியுமோ, அத்தனை விரைவாக வரச்சொல் என்றவர், மதுராந்தகனையும் மலையரசரையும் இருக்கையில் அமரச் செய்துவிட்டு மேசையின் மீது இருந்த அலங்காரப் பொருட்களை அவரே கலைந்தார் .

‘‘சசிதரா வெளியே நிற்பவரை நான்கு பிடி மணல் அள்ளி வந்து மேசையில் கொட்ட சொல்லு, கூடார காவலை பத்தடி தள்ளி நிற்கச் சொல்‘‘ என்றார். அவ்வாறே செய்த சசிதரன் தன் பங்குக்கு அவரும் ஒரு பிடி மண்ணை அள்ளிக் கொட்டினார்.

‘‘சுசித்ரா! இங்கு வா, இந்த இருக்கையில் உட்கார்‘‘ என்ற அருமொழிதேவர், மேசையில் கொட்டியிருந்த மணலைப் பரப்பி அருள்மொழித்தேவர் வரையத் தொடங்கினார். அதை பார்த்த இளவரசர் மதுராந்தகன் ‘‘அண்ணா நம்மிடம்தான் வரையக்கூடிய எழுதக்கூடிய வெண்மையான துணி சீலைகள் உள்ளனவே, பிறகு ஏன் மணலில் வரைகிறீர்கள்‘‘ என்றார். இடைமறித்த சசிதரன் ‘‘சில பாதுகாப்பு காரணங்களால் நாம் இது போன்ற முறையை கையாள்கிறோம் இளவரசே‘‘ என்றார். இளவரசர் அருண்மொழித்தேவர், மணலில் வரைந்த அந்த ஓவியம் திருவண்ணாமலையிலிருந்து திருக்கோவிலூர் வரை செல்லும் வழிகளின் வரைபடம் போல் காட்சியளித்தது. வரைந்து முடித்த அருண்மொழித்தேவர் ‘‘சசிதரா நாம் கடந்த முறை சக்கரவர்த்தியை நேரில் சந்தித்தபோது அவர் கூறிய விஷயங்கள் உனக்கு ஞாபகம் இருக்கிறதா? ‘‘ என்றார். எல்லா நிகழ்வுகளும் எனக்கு ஞாபகம் இருக்கின்றன இளவரசே! நமது சக்கரவர்த்தி நாடு நலம்பெற சிவபஞ்சமி பூஜைகள் செய்வதாகவும், அதன் பொருட்டு பாம்பணிகூற்றத்து பாதாளேசுவரர் கோவிலில் பவுர்ணமி பூஜையை தொடங்கியதாகவும் இது இன்னும் ஒரு நான்கு மாதங்களுக்கு வெவ்வேறு சிவ தளங்களில் தொடரும் என்றும் கூறினார். அவரது கூற்றுப்படிப் பார்த்தால் இன்று இது கடைசி பௌர்ணமி பஞ்சமி பூஜை. அது திருவண்ணாமலை ஆக இருக்கக் கூடும் என்பது எனது கணிப்பு. அது உண்மையாகி விட்டதா ? என்றார் சசிதரன்.

ஆமாம்! இன்று சக்கரவர்த்திதான் திருவண்ணாமலை வருகிறார்.
அவருக்காகத் தான் இவர்கள் காத்திருக்கிறார்கள் என்று இளவரசர் அருண்மொழித்தேவர் கூறியதும் மற்ற மூவரும் சற்று அதிர்ந்து தான் போனார்கள்.

தந்தை, என்னிடம் கூட ஒரு வார்த்தை சொல்லவில்லையே தான் வருகிறேன் என்று! இப்படி தனக்குத்தானே பேசிக்கொண்ட மதுராந்தகரை புன்னகையோடு பார்த்த இளவரசர் அருண்மொழித்தேவர், மலையரசர் பக்கம் திரும்பி மலையரசரே இதோ இங்கிருந்து அதுவரை என்ன இடம் என்று தெரிகிறதா ? அங்குதான் தாக்குதல் நடக்க போகிறது. மரங்களின் கிளைகளில் வில்லாளி இருக்க தோதாக வெட்டப்பட்டிருக்கிறது என்றவர், ஒரு குறிப்பிட்ட இடத்தை வட்டமிட்டு காட்டி இதுதான் உங்களின் இடம். நான் இங்கிருந்து புறப்பட்டதிலிருந்து நான்காம் நாழிகையில் சக்கரவர்த்தி தன் படையுடன் வந்து இருப்பார். சக்கரவர்த்தி தருணத்தில் தம்பி மதுராந்தகனும், சசிதரனும் இருப்பார்கள். நீங்கள் உங்களில் சிறந்தவர்களை அழைத்துக் கொண்டு அங்கே முன்னமே சென்று காத்திருங்கள். நம் எதிரிகள் ஆயத்தப்படுத்தி கொள்ள எழுப்பக்கூடிய சங்கேத ஒலியே உங்களுக்குமான ஆயத்த ஒலி.
விலங்குகளை எப்படி பயமுறுத்தி உங்கள் கண்ணுக்குள் செலுத்தி வேட்டையாடுவீர்களோ, அதே முறையை பயன்படுத்துங்கள். நினைவிருக்கட்டும்! கையிலோ, கழுத்திலோ விசேஷ பச்சை குத்தப்பட்டு இருப்பவர்கள் உயிருடன் வேண்டும். மற்றவர்களைப் பற்றி எனக்கு கவலையில்லை. சோழ நாட்டிற்குள் இத்தகைய செயலுக்கு துணிந்து வந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அவர்கள் தண்டிக்கப்பட்டிருக்க வேண்டும். என் விருப்பம் சிறந்த வீரனுக்கு சிறிய தண்டனையும் பெருத்த கோளைக்கு பெரிய தண்டனையும் கொடுத்து விடுங்கள். தண்டனை உங்களுக்குப் புரிகிறதல்லவா ! இத்தனை விவரம் உங்களுக்கு போதும் என்று நினைக்கிறேன் மலையரசரே.!

மலையரசனுக்கோ பதில் சொல்ல நா எழவில்லை. இளவரசே, இப்பெரும் பாக்கியம் கிட்ட, நான் என்ன தவம் செய்தேனோ தெரியவில்லை. என் பிறப்பின் பலனை அடைந்தேன். சோழ நாட்டுப் போர் பெரும்படையில் என்றேனும் ஒருநாள் நான் பங்குகொள்வேனா! என்று ஏங்கி இருந்த எனக்கு இப்பெரும் பாக்கியத்தை கொடுத்த உங்களுக்கு எப்படி நன்றி சொல்வேன் என்றவரின்

கண்கள் கலங்கியது.

மலையரசரே உங்களின் பங்களிப்பால் சோழநாடு மேலும் மிளிர போகிறது என்ற இளவரசர் அருள்மொழிதேவர் நோக்கி எனக்கு ஒரே ஒரு சந்தேகம் என்றார் மலையரசர்.

என்ன என்பது போல் புருவத்தை அருள்மொழித்தேவர் உயர்த்த, திருவண்ணாமலையில் திரட்டக்கூடிய சோழர் படையை தவிர்த்து எங்களை அழைத்ததற்கு என்ன காரணம் என்றார். இளநகை புரிந்த இளவரசர், நாளை கோட்டைக்கு நீங்கள் வருவீர்கள் அல்லவா! அப்போது சொல்கிறேன் என்றார், அருமொழித்தேவர்.

இளவரசே நான் இப்போது விடைபெற்றுக் கொள்கிறேன். நாளை உங்களை நல்ல செய்தியோடு சந்திக்கிறேன் என்று கூறிய மலையரசர், அந்த இடத்தை விட்டு கிளம்பினார்.

அவர் போகும் வரை காத்திருந்த இளவரசர் மதுராந்தகர் ‘‘அண்ணா எதற்காக நமது சோழப் படையை தவிர்த்து மலையரசரின் வேடுவர் படையை அழைத்தீர்கள், நான் அதை அறிந்துக் கொள்ளலாமா? என்றார். சசிதரன் தான் அதற்கு பதில் அளித்தார் ‘‘இளவரசே இதுவரை நமக்கு கிடைத்த தகவல்கள் யாவும் இளவரசரின் அதாவது அருண்மொழித்தேவர் அறிந்த கைகோளர் படை எனும் தனிப்படையில் இருந்து கிடைத்தது. அதை தவிர்த்து மலையரசன் மட்டுமே இங்கு நம்மிடம் கூறியுள்ளார். முச்சந்தி சத்திரத்தில் சந்தேகத்திற்கு இடமான நிகழ்வுகள் நடக்கிறது என்று. ஆனால் எங்கிருந்து நமக்கு தகவல் வர வேண்டுமோ, அங்கிருந்து வரவில்லை, இது முதன்மை‘‘ என்றார்.

தன் வலக்கரத்தை உயர்த்தி சசிதரனை நிறுத்திய இளவரசன் அருண்மொழித்தேவர், ‘‘தம்பி மதுராந்தகத்தில் இன்று இத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்தி வருகிறவர் யார்? என்ற முழுமையான தகவல் சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் நமக்கு தெரியாது. ஆனால் எப்படி ? எங்கு தாக்கப் போகிறார்கள் என்பது சிவனருளால் அறிய பெற்றோம். அதை எப்படி தடுத்து நிறுத்த வேண்டும் என்பதே நமது இப்போதைய முதற்கண் கடமை. அதன்கண் நாம் எப்படி நமது எதிரியை அல்லது துரோகியை கண்டுபிடிக்க போகிறோம் என்பது இப்போதைய வேலை. நமது அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது அவர்களுக்கு தெரிவதற்கு வாய்ப்பே இல்லை. ஏன், உங்களுக்கு கூட தெரியப்போவதில்லை.

என் இளம் சோழ புலிகள் உங்கள் இருவருக்கும் இப்போது ஒன்றை மட்டும் உறுதிப்படுத்துகிறேன் இன்று உங்களுக்கு நல்ல வேட்டை. புலி வேட்டைக்கு வந்தவர்களை புலியே வேட்டையாடி பார்த்திருக்கிறீர்களா? இன்று பார்ப்பீர்கள்! ஏனெனில் வேட்டையாட போகும் புலிகளே நீங்கள்தான்....

புலி வேட்டை ஆரம்பம்,
அல்ல!

## புலிகளின் வேட்டை ஆரம்பம்..........

# கைத்தொழில்

பெண்களின் முன்னேற்றத்திற்கு மிகவும் அத்தியாவசியமானது கைத்தொழில். தற்காலத்தில் ஒரு வீதிக்கு 3 தையல் கடைகள் வீதம் வந்துவிட்டது.

ஆம், ஒரு தையல் இயந்திரம் 10 ஆண்களுக்கு சமம்.

ஒரு தையல் இயந்திரத்திற்கு முதலீடு செய்தால் 10 குடும்பத்தை உட்கார வைத்து சோறுபோடலாம். முறையான பயிற்சியும், கற்பனைத்திறனும் இருந்தால் சிறந்த ஆடை வடிவமைப்பு வல்லுநராக ஆவதில் எந்த ஐயமும் இல்லை.

குறைந்த முதலீடு, பெரிய லாபம்

நாமே முதலாளி, நாமே தொழிலாளி

நாம நாலுபேருகிட்ட போய் நிக்காமல் நாலுபேரை நம்மைத் தேடி வர வைக்கும் தையல் இயந்திரம். சிறந்த இல்லத்தரசியாகவும் இருக்கலாம் தொழிலதிபராகவும் ஆகலாம்

நன்றி

கற்பகம் (ஆசிரியை)





ஸ்ரீ.சந்தோஷ் ராஜ்
7 வகுப்பு ஆ பிரிவு
மணிமேகலை நடுநிலைப் பள்ளி ,
மன்னார்குடி

# காசு என்னும் காகிதம்

நான் பிறந்த இடம் மறந்துவிட்டேன்!

என் சொந்தங்கள்
மறந்து போயின.

என் தொப்புள் கொடி உறவுகள்
தொலைதொடர்பில் மட்டும்!

பல மைல் தூரம் பயணம்,
காசு என்னும் காகிதத்திற்காக!

இப்போது காசு காகிதங்களாக
இல்லை....
கடன் அட்டைகளாக பலர் கையில்!

அவர்களை கடன்காரர்களாக்க
காசே மாறிவிட்டது வடிவத்தில்...
ஆனால்,
மனிதனின் காசு சேர்க்கும்
ஆசை மாறவில்லை அவன்
உள்ளத்தில்....

காசை சேர்த்துவிட்டேன்
நான் சிறிதளவு.
ஆனால்,
சந்தோஷத்தை இழந்துவிட்டேன்
பெரிதளவு!

இவண்
காசு என்னும் காகிதம்
தேடி அலையும்
ஒருவன்!!!

**கை. கபிலன்**
உள்ளிக்கோட்டை ...



# மருத்துவ அனுபவம்



ராணிச்சந்திரன்
மன்னார்குடி

உடம்பில் அரிப்பு, தடிப்பு என்றாலே விசக்கடி என்று முடிவு செய்து விசக்கடிக்கான மருத்துவத்தையே செய்து கொள்கிறார்கள். ஏனென்றால் வெளியிலிருந்து ஒரு தாக்குதலைத் தோல் வெளிப்படுத்தியது ஒரு காலம். ஆனால் இப்போது அனைவருக்கும் வரும் தோல் பிரச்சினைகள் அப்படி அல்ல.

உடலுக்குள் பொருந்தாத ஒரு பொருள் சென்றால் அதை உடம்பு வாந்தியாக வெளியேற்றிவிடும். அதை வெளியேற்றாமல் மாத்திரை பட்டு தடுத்துவிட்டால் உடல் அடுத்தகட்ட நடவடிக்கையாக பேதியாக வெளியே அனுப்பும். அதையும் மாத்திரை போட்டு நிறுத்திவிட்டால் அடுத்த கட்ட நடவடிக்கையாக உடல் முழுவதும் சூடேற்றி காய்ச்சலாக பொருந்தாத கழிவுகளை கொளுத்தி வெளியேற்றும், அதையும் மாத்திரை போட்டு குறைத்து விட்டால் நான்காவது நடவடிக்கையாக தோல் அந்த முயற்சியை எடுக்கும். இதுதான் தோல் பிரச்சினை, இது வெளியிலிருந்து வந்த விசமல்ல. உள்ளிருந்து வெளியேற்றம் செய்யும் விசக்கிருமிகள்.

இதற்கு ஆங்கில மருத்துவத்தில் தீர்வு கிடையாது. வெளியிலிருந்து வந்த விசக்கடி என்றால் அமாவாசை, பௌர்ணமி தினங்களில் தான் அரிக்கும்,தடிக்கும். நம்மால் அனுப்பப்பட்ட இரசாயன பொருட்கள் பொருந்தாத பொருள்களின் விசங்ககளினால் ஏற்படும் அரிப்பு தடிப்புகளுக்கு நம் பாரம்பரிய மருத்துவத்தால் தான் குணப்படுத்த முடியும். கழிவு தேக்கம் நோய், கழிவு நீக்கம் சிகிச்சை என்ற முறையில் விசத்தை சிறிது சிறிதாக வெளியேற்றி கெட்டுபோன ரத்தத்தை தூய்மை செய்து தோலில் உள்ள செல்கள் அனைத்தையும் புதுப்பிக்க வேண்டும். எங்களிடம் வரும் நோயாளிகளில் 75 சதவீதம் தோல் பிரச்சினையில் தான் வருகிறார்கள்.

உண்ணும் உணவும், சாப்பிட்ட மருந்தும் ஏற்படுத்திய இரசாயனக் குவியலாய் உடம்பு மாறிவிட்டது. மேலே எதாவது மருந்து போட்டு மேல் பூச்சினால் சரிசெய்ய முயற்சி செய்கிறார்கள். சாக்கடையை உள்ளே வைத்து மேலே பூசினால் ஏதோ ஒரு இடத்தில் உடைத்துகொண்டு மேலே வரும்.

அதுபோல கழிவுகள் முதலில் ஒரு இடத்தில் வெளியேற தொடங்கும் போது மற்ற இடத்தின் மூலம் தோல் வெளியேற்றம் செய்வதற்கு முன் முறைப்படி கழிவு நீக்க உறுப்புகளின் வழியாக கழிவுகளை நீக்கசெய்ய முயற்சி எடுத்தால் சாதாரண அரிப்பு, தடிப்பு மட்டுமில்லாமல் சோரியாசிஸ் வரைக்கும் முழுமையாக குணப்படுத்திவிடலாம் என்று 100 சதவீதம் நம்பிக்கையுடன் எங்கள் மருத்துவ அனுபவத்தில் சொல்கிறோம்.

# ஆழ்மனதின் சக்தி



''எண்ணம் போல் வாழ்க்கை'' என்று கூறுவதை கேட்டிருக்கிறோம். ஆம் இது உண்மை. இதில் நாம் எவ்வகையான எண்ணங்களை எண்ணுகிறோம் என்பதில் தான் விசயமே இருக்கிறது, நேர்மறை, எதிர்மறை என இருவகையான எண்ணங்கள் உள்ளதைநாம் அனைவரும் அறிந்த ஒன்றே.

சரி, நனவு மனம் (consious mind), ஆழ்மனம் (sub consious mind) என்று இரு மனங்கள் உண்டு. ஆழ்மனம் அற்புதம் வாய்ந்தது. இதில் நேர்மறை எண்ணங்களை மட்டுமே நாம் திரும்ப, திரும்ப பதிவு செய்யும்போது, அந்த எண்ணங்களுக்கு கற்பனையில் உயிர் கொடுக்கும் போது, எண்ணங்கள் நிறைவேறும் என அதீத நம்பிக்கை வைப்பது.இவற்றை தொடர்ந்து முயற்சித்தால் நம் வாழ்விலும் ஆழ்மனம் அற்புதத்தை நிகழ்த்தும்!
முயன்று பாருங்கள்

நன்றி
ரோசி (ஆசிரியர்)

---

# இந்திய கலாச்சாரம் வெறும் கட்டுக்கதையா ?



ஸ்ரீ பிரியா சுந்தர்

உலக அளவில் மிகவும் பெருமையாக பேசப்படும் கலாச்சாரத்தில் இந்தியாவும் ஒன்று. வேற்றுமையில் ஒற்றுமை நிறைந்த பாரதம் என்று மார்தட்டிக்கொள்ளும் மக்கள் நாம். கலாச்சாரம் என்பது மக்கள் எப்படி வாழ்கிறார்கள், அவர்களுடைய மொழி, நம்பிக்கைகள், உணவு, உடை, மரபுகள் மற்றும் பல விசயங்கள். இந்திய கலாச்சாரத்தின் இந்த கூறுகள் மேற்கத்திய மோகத்தால் பாதிக்கப்படுகின்றன. அப்படி பார்த்தால் இந்திய கலாச்சாரம் வெறும் கட்டுக்கதையா ?

வெளிநாட்டினர் நமது பண்டைய சிற்ப கலையும் அதில் புலப்படும் காமசூத்ர ரகசியங்களை ஆய்வு மேற்கொண்டு போற்றி புகழ்கின்றனர். காமசூத்ராவும் வேதங்களுக்கு சமமான ஒன்றுதான். பாலியல் ஒரு தடை அல்ல. அது புதிய வாழ்க்கையை உருவாக்கும் ஒரு செயல். வேதங்களை போல் இதுவும் புனிதமானது. இன்றைய சமூக சூழலில் நம் பிள்ளைகளுக்கு பாலியல் கல்வி கட்டாய கல்வியாக்கும் சூழ்நிலை நிலவுகிறது. சிறுவயதில் அவர்களுக்கு மலம் கழிப்பதை (potty training) கற்று கொடுக்கும் நாம் பாலியல் கல்வியை கற்றுத்தர

தயங்குகிறோம். ராணி லட்சுமி பாய், சரோசினி நாயுடு, கஸ்துரிபாய், கமலா நேரு, இந்திரா காந்தி போன்ற பல வீர மங்கைகளின் கதைகளை சிறுவயது முதல் பிள்ளைகளுக்கு கற்றுத்தர வேண்டும். பெண்கள் வீரமானவர்கள், ஆணுக்கு சமம் என்பதை புரியவைக்க வேண்டும். இன்றைய தலைமுறையில் பெண்கள் பல துறைகளில் சாதனை புரிகின்றனர். ஆனாலும் 81% பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகிறார்கள் என்று ஒரு ஆய்வு கூறுகிறது.

நமது நாட்டின் வளங்களை நாமே சூறையாடி அயல் நாட்டினருக்கு விற்கிறோம். மணல் திருட்டில் தொடங்கி, மதத்தின் பெயரில் நதிகளை அழித்து, சிலைகளை கடத்தி நம் நாட்டிற்குள்ளேயே ஒரு அந்நிய சமூகத்தை உருவாக்கிக் கொண்டு இருக்கிறோம். இது நம் பொது உடமை என்பதை மறந்து சுயநலவாதிகளாக செயல்படுகிறோம். இந்த நிலை நீடித்தால் நம் பிள்ளைகளுக்கு தேசிய வளங்கள் என்று சுட்டிக் காட்ட ஒன்றும் மிஞ்சாது. நாளைய தலைமுறைக்கு வெறும் புகைப்படத்தில் மட்டுமே நமது இந்திய வளங்களை காட்டும் சூழ்நிலை வரும். அது மிகவும் வேதனையான ஒன்று!

வேற்றுமையில் ஒற்றுமை நிறைந்தது பாரதம் என்ற கூற்று கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது. இனம்,மதம், சாதி என பல்வேறு கூறுகளை எடுத்துக்காட்டி சண்டை போட்டுக்கொண்டிருக்கிறோம். சாதிகள் இல்லையடி பாப்பா என்று பாரதியின் பொன்மொழி வெறும் ஏட்டில் மட்டுமே இருக்கிறது. பள்ளி படிப்பில் தொடங்கி திருமணம் வரை இனம், மதம்,சாதியின் வேட்டை தொடர்கிறது.

மாற்றம் ஒன்றே மாறாதது. ஒரு கலாச்சாரத்தில் மாற்றங்கள் வருவது இயற்கையே. ஆனால் நம்முடைய மாற்றம் நாளைய தலைமுறையினருக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும். இந்தியனின் புகழும் கலாச்சாரமும் நம் கையில் உள்ளது. அதை கட்டிக்காக்கும் பெரும்பொறுப்பு நமக்கிருக்கிறது. பிறநாட்டினர் நம் கலாச்சாரத்தை என்றும் போற்றி புகழ வேண்டும் என்ற கர்வம் நம்முள் இருக்கவேண்டும். நம் கலாச்சாரம் வெறும் கட்டுக்கதையாய் போய்விடகூடாது. இந்திய கலாச்சாரத்தை மெருகேற்றி அதன் அழகை பிரகாசிக்க முயல்வோம்.

---

# பெற வேண்டும் என்றால் கொடுங்கள்

கஜா புயலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கொடுத்த அனைத்து தமிழக மைந்தர்களுக்கும் இது சமர்ப்பணம்.

செல்வத்தை ஈர்க்க
என்றாவது ஒருநாள் உங்களிடம் போதுமான செல்வம் இல்லை என்று நினைத்து வருத்தபட்டது உண்டா, அது ஏன் இல்லை என்று ஆராய்ந்து பார்த்து உள்ளீர்களா, என்னை பொறுத்தவரை 100 க்கு 99 சதவீதம் அவ்வாறு நினைக்க வாய்ப்பு இல்லை, ஏனென்றால் அதற்கு போதுமான நேரம் நம்மிடம் இல்லை என்று மேலோட்டமாக நினைத்துக் கொண்டு கிடைப்பதை வைத்து வாழ்க்கையை நகர்த்துகின்றோம்,

உண்மையில் நம் மனம் எதை நோக்கி நேர்மையாக பயணிக்கிறதோ அதை அதன் வழியில் விட்டுவிடுங்கள் அது உங்களுக்கு செல்வத்தையும் வெற்றியையும் உங்களிடம் கொண்டு வந்து சேர்க்கும்.

பொதுவாக நமக்கு செல்வம் வேண்டுமென்றால் கடினமாக உழைக்க வேண்டும் என்ற அறிவுரைகளை நாம் கேட்டிருப்போம், அப்படி ஒரு எண்ணம் இருந்தால் அதை தூக்கி எறியுங்கள், அப்படி நீங்கள் சிந்திக்கும் பொழுது நீங்கள் இன்னும் கடினமாக உணரப்படுவீர்கள், செல்வம் சேமிப்பு என்பது அது வெறும் மன நிலை தான், அது நீங்கள் எவ்வாறு சிந்திப்பீர்கள் என்பதை பொறுத்து, நீங்கள் என்ன சிந்திப்பீர்களோ அதுவே நடக்கும்.

செல்வத்தை நம் வசப்பட செய்ய வேண்டுமென்றால் அது குறித்து உங்களுக்கு மகிழ்சியான எண்ணம் மற்றும் உணர்வு இருந்துக் கொண்டே இருக்க வேண்டும், மக்களிடம் செல்வம் இல்லாத போது அவர்களின் சோகமான மனநிலை அவர்களிடம் செல்வத்தை மேலும் வரவிடாமல் செய்கிறது,
எதிர்மறை எண்ணங்கள் செல்வம் உங்களை நோக்கி வருவதை தவிர்க்கின்றன, அதை சரி செய்ய எப்பொழுதும் செல்வம் என்னிடம் நிறைய உள்ளது என்றும் நான் செல்வத்தை நேசிப்பவன் என்று மனதார சொல்லிக்கொண்டே இருங்கள், நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சியான உணர்வுடன் இருக்கிறீர்களோ அவ்வளவு செல்வத்தை உங்களிடம் கொண்டுவரும்.

செல்வத்தை தக்கவைக்க

உங்களிடம் இருக்கும் செல்வத்தை தக்க வைக்க உங்களிடம் இருக்கும் செல்வத்தை பிறருக்கு கொடுத்து உதவுங்கள், அந்த பெருந்தன்மை உங்களுக்கு மகிழ்ச்சியான உணர்வை தருவது மட்டும் இல்லாமல் உங்களுடைய செல்வத்தை தக்க வைக்கிறது, நீங்கள் கொடுக்கும் ஒவ்வொரு செல்வமும் உங்களுக்கு தெரியாமல் உங்களிடம் இரட்டிப்பாக கொண்டு வந்து சேர்க்கும். சற்று நினைத்து பார்த்தால் உலகிலுள்ள செல்வந்தர்கள் அனைவரும் நன்கொடையாளர்களாக இருப்பார்கள்.

உங்களிடம் போதுமான செல்வம் இல்லை என்று நினைக்க துவங்கும் முன் கொடுக்க துவங்குங்கள், அப்படி கொடுக்கும் பொழுது செல்வத்தின் ஈர்ப்பு விசை இன்னும் அதிகப்படியான செல்வத்தையும் மகிழ்ச்சியான சூழ்நிலையையும் உருவாக்கும்,

இன்னும் எளிமையாக சொல்ல ஆசை படுகிறேன்

தலைப்பை படியுங்கள்

பேரன்புடன்
பிரகதீஸ்வரன்.பா

# மாமன் மகள்

அன்பையும் பண்பையும்
பகிர்ந்தளிப்பவள்,
பாசத்தை காட்டி பயணிப்பவள்!

எனக்கு ஒரு துன்பம் என்றால்
தனக்கு ஒரு துன்பம் என்று
எண்ணுபவள் அவள்!

அடுத்தவீட்டிற்கு சென்றாலும்
அன்பு குறையாதவள்
அவள்!

வீட்டிற்கு
செல்லும்பொழுதெல்லாம்
பொன்சிரிப்போடு என்னை
வரவேற்பவள் அவள்!

அன்னையின் மறு உருவம் அவள்,
தந்தைக்கு நிகரானவள் அவள்!

பசியோடு சென்றால்
பறந்து பறந்து பரிமாறும்
குணம் கொண்டவள் அவள்!

ஆயிரம் சொந்தங்கள் அருகில்
இருந்தாலும் அன்போடு என்னை
அரவணைப்பவள் அவள்!

யாரிடமும் கை நீட்ட கூடாது
என்று கட்டளை இட்டவள் அவள்!

ஆயிரம் கவலையோடு சென்றாலும்
கவலையை மறக்கடிக்கும்
கண்கள் உடையவள் அவள்!

நான் தடுமாறும் போது தாங்கி பிடிக்கும்
சக்தி கொண்டவள் அவள்!

வாழ்க்கைக்கு வழிகாட்டியாய்
திகழ்பவள் அவள்!
என் வாழ்க்கையை வசந்தமாக்கியவள்
அவள்!
என் உயிருக்கு உருவம் அவள்!



**S.S. கார்த்திக், DME**
உள்ளிக்கோட்டை



ஓவியம்
S. ஹரிதா
LKG
SBV பள்ளி

# வரிசைப் பணம்

ஒரு கட்டு கரும்பு,
நாளை பழுத்துவிடும் என்று
வாங்கிவந்த
வாழைத்தார்!
அதோடு உதிராத
இஞ்சிக்கொத்தும், மஞ்சள்கொத்தும்..!

கடனுக்கு வாங்கி வந்த
கண்டாங்கி புடவை ஒன்னும்,
வெள்ளை வேட்டி ஒன்னும்!
வரிசைப்பணம் நூறும்,
வடக உருண்டை பையும்
என அம்மா அனுப்பி வைப்பாள்.
என் அக்காவுக்கு -
பொங்கல் சீர்!

சைக்கிளை எடுத்து,
எழுந்து பெடல் மிதித்து
விருட்டென போகும்
என்னை,
தெருமுனையில் திரும்பும் வரை
பார்த்து விட்டு
பின் மறைவாள்
என் அம்மா..!

அடுத்த ஊரில்
இருக்கும்
அக்கா வீடு போவதற்குள்,
மூச்சு வாங்கியிருக்கும்,
உடம்பெல்லாம்
வியர்த்திருக்கும்.

தம்பி வாடா, என
தவிப்போடு எனையழைக்கும்
அக்காவின் வீட்டுக்குள்...
ஆட்டுக்கறி கொழம்பும்...!
அம்மியில்
அரைச்சு வச்ச
மீன் குழம்பும்
எனை இழுக்கும்...

அட்டை விசிறி தந்து விட்டு
நீர் எடுத்து வர,
சமையலறை நோக்கி ஓடும்
அக்காவுக்கு,
பிறந்த வீட்டு சீரைக் கண்டு
பெருமை -
இருப்புக்கொள்ளாது.

இடித்து பேசும் மாமியாக்காரி.
இளக்காரமாய் பார்க்கும் கட்டியவன்
இவர்கள் - பார்க்கட்டும் என்பதற்காகவே
திண்ணையிலேயே
பரப்பி வைப்பாள்
பிறந்த வீட்டு - சீதனத்தை!

சாப்பிட்டு முடித்ததும்..
வரிசைப் பணத்தைக்
கையில் திணித்துவிட்டு
''வரேன் அக்கா'' என்ற
ஒற்றைச்சொல்லுக்கு
ஓ! வென்று-
அழுவாள்...! பின் -
அழுகையை அடக்கி
சிரிக்க முயன்று
கண்ணீர் மறைத்து
சோகம் மறைத்து
போய் வா! என தலையசைக்கும்
அக்காவை
இன்று நேற்றா
பார்க்கிறேன்....!
சரி -
இனி எப்போது வரும் .
அடுத்தப் பொங்கல்..!?



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி

# என் கணவனுக்காக

கனவினில் நீ வர கண்மூடி கிடக்கின்றேன்,
ஆனால் உறக்கமின்றி தவிக்கின்றேன் உன்
நினைவுகளில்...

காதல் கணவா,
காதலும் காணவில்லை; கனவும்
வரவில்லை;
காரணமோ என் அருகில் நீ இல்லை.
உன்னை சுமந்த நெஞ்சுக்குழி
அருகேயுள்ள இதயத்தின் துடிப்பை
இரட்டிப்பாக்கி இம்சை செய்து என்னை
பலவீனமாக்கி பழுதுபார்க்கிறது!

உன் விரல்கள் என் உள்ளங்கைப்பற்றி
அழுத்தமாய் சொன்ன கவிதைகள்,
அது நம் காதலை உணர்த்திய தருணங்கள்.
என் கோபத்தை நான் சொல்ல - உன்
காதலால் அதை நீ வெல்ல
அந்த நினைவுகள் எனைக் கொல்ல
தவிக்கிறேன் என் அன்பை நேரில் சொல்ல

காத்திருந்தேன், காத்திருக்கிறேன்,
காத்திருப்பேன்...
காத்திருந்த தருணத்திற்கு நீ தந்த காதல்
அழகு.
இப்பொழுது காத்திருக்கும் தருணத்திற்கு நீ
தரப்போகும் காதல்
எல்லையில்லா காவியமாக தொடர
உனக்காக நான் இங்கே காத்திருக்கிறேன்!...
காத்திருப்பேன்!...
என் அன்பு கணவா!....

- பொன்மணி தர்மராஜன், BE.,
பரவாக்கோட்டை

S.K. நிருபன்
V "C" Sec
மன்னை



# நீண்ட நெடிய நமது தமிழர் வரலாற்றின் வியக்க வைக்கும் பல விடயங்கள்

(ஆதாரத்துடன், விளக்கங்களுடன் - இந்த மாதம் முதல் ...)

உலையா உள்ளமோ டுயிர்க்கடன் இறுத்தோர்
தலைதூங்கு நெடுமரந் தாழ்ந்துபுறஞ் சுற்றி
பீடிகை யோங்கிய பெரும்பலி முன்றில்
காடமர் செல்வி கழிபெருங் கோட்டமும்
- மணிமேகலை

அரிகண்டம்- நவகண்டம் தூங்குத்தலை குறித்து இது போன்ற பல பாடல்கள் மணிமேகலை, சிலப்பதிகாரம், கலிங்கத்துப் பரணி போன்ற பல இலக்கியங்களில் கிடைக்கிறது. கடந்த 200 ஆண்டுகள் முன்புவரை கூட இருந்த இந்த மரபிற்கு 18 ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் அரசு தடை தித்து, உயிரை மாய்த்துக் கொள்ளுதல் தண்டனைக்குரிய குற்றமாக அறி த்து நிறுத்தியது

<u>''தூங்குத்தலை'' எனும் வீரச்சாவு</u>

கொற்றவையை நினைத்து வீரன் அமர்ந்திருக்க, அருகேயுள்ள மூங்கிலை வளைத்து, அதில் அவன்முடி கட்டப்பட்டிருக்கும். அவனுக்கருகேயுள்ள மற்றொரு வீரனோ அல்லது அவ்வீரனோ தலையை துண்டிப்பான். உடம்பிலிருந்த தலை அவனுடம்பிலிருந்து தனியாக மேலே நிமிரும். மணிமேகலை, கலிங்கத்துப்பரணி இந்நிகழ்ச்சியினை ஆவணப்படுத்தியுள்ளன.

''உலையா உள்ளமொடு உயிர்க்கடனிறுத்தோர் தலைதூங்கு நெடுமரம்''

''வீங்குதலை நெடுங்கழையின் சைதொறும்
திசைதொறும் ழித்துநின்று தூங்குதலை''

<u>நவகண்டம் - 9 strokes</u>

நவகண்டத்தில் (தமணி, சிரை போன்ற) உடலின் முக்கிய ரத்தநாளங்களை எட்டு இடங்களில் வெட்டிக் கொண்டு இறுதியாக கழுத்தை அறுத்துக் கொண்டு இறப்பர்....
இந்த நிகழ்வானது ஓரிரு நொடிகளில் நடந்து முடிந்துடும்.

ஒரு நல்ல வீரனால் மட்டுமே நவகண்டம் இட இயலும் ஏனெனில் நொடிப்பொழுதில் மற்றும் துல்லியமாக நரம்புகளின் மேல் வாள்வீச மிகவேகமான வாள்வீச்சு வீரனால் மட்டுமே முடியும்.

<u>அரிகண்டம்</u>

இது பொதுவாய் இறைவேண்டல்கள் ..

மன்னன் பால் தான் கொண்ட அன்பை வெளிப்படுத்துவதற்கு..

வயதில் மூத்தோன் வாழ்வை வெறுத்து எடுக்கப்படும் நிகழ்வுகள்...

ஒற்றைக் கையில் தன் தலைமுடி பிடித்து மறு கையால் வாள் எடுத்து தன் சிரசை தானே வெட்டிக் கொள்ளும் நிகழ்வுதான்..

அரிகண்டம்...



தூங்குத்தலை



நவகண்டம்



அரிகண்டம்

தகவல் திருச்சி பார்த்தி

# விந்தியம் தாண்டிய வினை

விருந்தாளி என்றழைத்தோம்,
விருந்தாளிக்கு பிறந்தவன்
என்றழைத்து விட்டான்.

சாத்திரம் சடங்கென கூற்றாக்கினோம்,
சூத்திரனென கூறுபோட்டு விட்டான்.

கோவிலில் குடியேற்றினோம்,
கோமியம் குடிக்க கூறுகிறான்.

இறவா அமிழ்தம் கொண்டோம்,
இறந்தவளைக் கொண்டு இறைவா
என ஆராதிக்கிறான்.

தினமொரு திண்ணை அமைத்தோம்,
தீண்டத்தகாத வனென அழைக்கிறான்.

வினையில்லா வித்தை கற்றோம்,
விளைவிப்பவர் யாவரும் வீணர்கள்
என வீழ்த்த துடிக்கிறான்.

வள்ளுவம் நமது வாய்மொழியாகும்,
பகுத்தறிவு நமது பண்பாடாகும்

- பெ.மேகநாதன்





## நூல் பொம்மை

ரூபா அசோகன்

பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal    Thiravukolmagazine